உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவக்ஷேத்திர விளக்கம்.

—0—

திருவண்ணாமலை

அண்ணாமலைத்தேசிகர் சிவஸ்தல யாத்திரை
செய்து அறிந்தவாறு இயற்றியது.

இஃது
வேதாரணியம்
அடங்கன்முறைக் கணபதிதேசிகரவர்கள்
வைத்திருந்த கையெழுத்துப் பிரதியைக்கொண்டு
நாகபட்டணம்
மகா.ள.ள. கிருஷ்ணசாமி உபாத்தியாயர்
அவர்களாலும்,
நெடுங்காடு மகா.ள.ள.ஸ்ரீ.
ள. ஆதிமூலப்பாவலரவர்களாலும்
பார்வையிடப்பட்டு,
திருப்பதிக்கோவை முதலியவைகளுடன்
மதுரைச்ஜில்லா நெற்குப்பை
தெ.பெ, பழனியப்பசெட்டியார் குமாரர்
அண்ணாமலைசெட்டியாரென்றழைக்கும்
பெரியகருப்பன் செட்டியார் அவர்கள்
பதிப்பித்த பிரதிக்கிணங்கச்

சில வணிககுல சிகாமணிகளால்

கொழும்பு
இலங்கைநேச முத்திராக்ஷரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.
விலை சதம் ௨௫.

—0—

விசு ௵ ஐப்பசி ௴

உ
சிவமயம்

ஸ்ரீ வேதாகம சித்தாந்த சைவசமயம் விளங்கு
ம்பொருட்டு யாழ்ப்பாணத்து நல்லூரில் திருவரு
ளாலவதரித்தவரும் சிவானுபவச் செல்வருமாகிய
ஸ்ரீல. ஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்க ளியற்றிய சைவ
சமய நூல்களிலொன்றாகிய சிவாலயதரிசனவிதி
யும் இச் சிவக்ஷேத்திரவிளக்கமும் நன்குணர்ந்து
அம்முறையே யொழுகுவோர் சிவபெருமான் றி
ருவடி நீழலில் வாழ்பவராவர்.

தாயுமானசுவாமிகள் அருளிச்செய்த பாடல்.

மூர்த்திதலம் தீர்த்த முறையாத் தொடங்கினர்க்
கோர் - வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும்
பராபரமே,

இதனுணர்க.

வேலுமயிலும் துணை.

சிறப்புப்பாயிரம்.

—(o)—

இராமநாதபுர சமஸ்தான வித்துவான் மஹா ராஜ மான்ய ராச சிறீ. அட்டாவதானஞ் சரவணப்பெருமாள் கவிராய ரவர்கள் பௌத்திரரும், அருணாசலக்கவிராய ரவர்கள் புத்திரருமாகிய துவாத்திரியம் சதாவதானி

சரவணப்பெருமாள் கவிராயரவர்கள்

இயற்றிய

நேரிசையாசிரியப்பா.

—(o)—

திருமகள்விருப்பந் தருமொருமருமனுந்
தெள்ளிசையளிமுரல் வெள்ளிதழ்க்கமல
மலர்த்தவிசமர்ந்த கலைக்கொடிநாவனும்
வண்ணார்படிவக் கண்ணாயிரத்தனும்
அமையாதரமலி யிமையாயனரு
மம்புவியவரு நம்புமெய்த்தவரும்
அண்ணியாங்கணையுமு மெண்ணியாங்கெய்த
வணையெனத்தருந்தவப் புனைவளநதழீஇப்பவக்
கருவண்ணாதுசெய் திருவண்ணாமலைத்
திருப்பதிவளர்சிவ மருப்பதியுரவோன்
தண்ணார்மதிமுகத் தண்ணாமலைப்பெயர்த்
தேசிகன்பாச மாசிகல்கடந்தோன்
கீர்த்திரையுடுத்த கோத்திரையனைத்தினுஞ்
சீர்த்திகொள்சிவஸ்தல யாத்திரையியற்றுபு
வுள்ளமாசடையா ருணர்ந்தமாசடையார்
துள்ளுவெண்கங்கையார் தொண்டரகங்கையார்.
தும்பையார்முடியார் துதித்தனன்முடியார்
நம்புமெய்யடியார் நாடுசேவடியார்
மேனிகாயிருப்பார் விருப்புளத்திருப்பார்
மானிலாங்கரத்தார் வரத்தினகரத்தார்
என்னையாளுடையா ரிலங்கும்தாலுடையார்

சிறப்புப்பாயிரம்.

அன்னையுமைபாக ரணிமருப்பாகர்
ஒருத்தலாம்பெருமா னுரித்தசிவபெருமான்
திருத்தகவசிக்குஞ் சிவஸ்தலப்பெயரும்
அத்தலத்தொகைமையு மடியார்தகைமையும்
முத்தவத்தொண்டர் மொழிதிருப்பதிகமும்
தெரிந்தொருங்கமைத்துத் தருந்திருவசனமும்
அருந்தமிழ்முதியோர் பரிந்துமுன்னியற்றிய
தருப்பதியும்புகழ் திருப்பதிக்கோவையுஞ்
சதுமறைபுரைதிருப் பதிகக்கோவையும்
பின்றாழ்சடையான் றன்றாட்பத்திமை
குன்றாமுயற்சியா னொன்றாத்திரட்டி
யீகையம்பதிசூழ் நாகையம்பதிவாழ்
இயற்றமிழ்க்கும்பன் வயக்கவிக்கம்பன்
கலைக்கடல்வரம்பு காணமதிவங்கம்
தலைப்படுகுணத்தான் சற்சனர்சபாமணி
தரைபுகழ்கிருஷ்டிண சாமிநாவலனால்
உரைபொருளகத்தக ளொருங்குகளைவித்துப்
பத்திமைவான்பயிர் படர்கொழுகொம்பென
முத்திவைப்பிற்புக வைத்தபொற்படியென
அன்பரும்பாம னவன்புலந்திருத்தி
யின்பரும்பயன்விளைத் திடுங்கருவியதென
எக்கலையுந்தெரி தக்கசான்றோருந்
தக்கதக்கதெனத் தனித்தனிதுதிப்பப்
பாத்திரமாம்பல சாத்திரமெவைக்கு
நேத்திரம்பொருசிவ க்ஷேத்திரவிளக்கமென்
றொருபெயர்புனைவித் திருவினையகன்று
கருவியன்மும்மலக் களையறக்கட்டுப்
டம்பியநால்வகைப் பதவியுட்புகுபாக்
கைம்புலனடக்கி நல்லாறுகாண்பான்
எழுதாரணிபுக ழெழுதாவெழுத்திற்
பழுதாய்ந்தகற்றிப் பதுப்பித்துகவினன்
காவிடைப்பெருகுவான் கடலிடைப்பருகுவான்
வாவிவான்வேண்டி மருவுதென்பாண்டி
யெங்கும்புகழ்சிவ கங்கைநாட்டொருசார்
பொற்குப்பைகுவியப் புனல்வயல்விளைதரு
நெற்குப்பைநகர்வாழ் நீணிதிநிகர்வான்

சிறப்புப்பாயிரம்.

அஞ்சாதுவாரியை யணுகுகாவேரியைப்
பஞ்சாலடைத்தோன் படர்புகழ்படைத்தோன்
தவவிசுவாசன் றனவணிகேசன்
சிவபதநேசன் சீர்த்திப்பிரகாசன்
வளையாற்றணிபட ரிளையாற்றக்குடிக்
கோயிலினடியார் தாயிலினிதமர்
அயிலார்மழுவணி கயிலாயநாதனை
நித்யகல்யாணியைப் பத்தியிற்பணிவோன்
கழனியாண்டலர்பங் கயத்தொடுதிகழும்
பழனியாண்டவ னிருபதம்பணிநேயன்
பாண்டியிலடியார் வேண்டியவரந்தரு
நலம்பதிநதயர்சிவ ஸ்தலபதினொன்றினுட்
சுருப்பிவர்வனசங் கருப்புயிர்மணிக்குவால்
பொருப்புறழ்தரக்குவி திருப்புனல்வாயிலின்
இனிதமர்ந்தருளிய நனிதவசிகாமணி
புனிதசைவாகமங் கனிதருமாமணி
தற்பரவெங்கடா சலகுருசாமியின்
பொற்பதவாரிசம் புனைமுடிக்கணிவோன்
கானார்முலையங் கண்ணிப்புயாசலன்
தேனாப்பேனாத் திகழ்பெயர்விலாசன்
பத்திமான்சத்திமான் பழனியப்பேந்திர
புத்திரன்பெற்ற புத்திரசிகாமணி
கல்விக்குதாரன் கனவுபகாரன்
செல்வக்குபேரன் திருந்தெழின்மாரன்
மாசற்றமனத்தான் வளர்பெருந்தனத்தான்
நேசபாசனத்தா னிலறந்தவிற்பனத்தான்
சிவநேசத்திற சிறந்தமாபத்திமா
னிவனேயெனப்புவி யேழ்சொலவந்தோன்
காமணியிருநிதி களைக்கொடையால்வென்
மாமணியண்ணா மலையெனவழைக்கும்
கார்க்கொண்டல் பெரியகருப்பன்
மார்க்கண்டனென்னும் வணிகர்குலேசனே

உ

கணபதிதுணை.

சிவமயம்.

நெடுங்காடு ம. ரா. ரா. ஸ்ரீ.

ரா. ஆதிமூலப்பாவலரவர்கள் இயற்றிய

சிறப்புப்பாயிரம்

நிலமண்டில வாசிரியப்பா.

—(o)—

திங்களங்குழவிவாழ் செஞ்சடாடவிமிசைக்
கங்கைவைத்தருளிய கண்ணுதற்பெருமான்
தில்லையம்பதியிற் றிருநடம்புரிவோன்
எல்லையில்கருணைய னேகநாயகன்
திரிபுரதகனன் சிந்துரத்துரிவையான்
அரியுமயனுமடிமுடி துருவுநாள்
ஒப்பிலாச்செந்தழ லுருக்கொடுநின்ற
அப்பொற்பதியா மருணைவெற்பதனில்
இல்லறந்தலைநின் றிறைவநூலியம்பும்
பல்லறவொழுக்கமும் படைத்துளோனாகி
மன்னியவண்ணா மலைத்தேசிகனும்
முன்னவனினிதுறை முதுபதிதொறுஞ்சென்
றின்னறீர்ந்திடுவா னேற்றிப்போற்றித்
தன்னுளத்தெழுந்த தடுப்பருங்காதலால்
ஒவ்வொருபதிக்கு மோதுமான்மியமும்
அவ்வகையீசற் கம்பிகைக்கெய்திய
திருநாமமுமுயர் தீர்த்தமும்விருக்ஷமும்
அருமாதவத்தோ ரன்பொடுதுதிக்குஞ்
சைவசமய குரவர்கண்மூவரும்
உய்வகையுரைத்த பதிகத்தொகையும்
கண்டுங்கேட்டுங் கருத்திலிருத்தி
கொண்டவ்வாறே கூறியநூலாஞ்
சீர்மேவியசிவ க்ஷேத்திரவிளக்கம்
பார்மீதெவர்க்கும் பயன்படுவண்ணம்
விரிசுடர்த்தரளந் தருவரிவெள்வளை

திரையெறிசிதவா ரிதிபுடைசூழ்
காரைகையம்பதியா னறநலமெலாந்திரண்
டாகுமோருருவெடுத்தனவனையான்
ஆன்றோர்பணிசிவ னடியரிற்சிறந்தோன்
ஏன்றநல்லொழுக்க மெலாம்பெறுசுகுணன்
சிந்தாமணியை யனையசெங்காதலன்
கந்தாவாய்மைய னல்லோர்நேயன்
தொல்காப்பியமுதற் பல்காப்பியங்களும்
அல்காவறிவி னுய்த் துணர்ந்துயர்ந்தோன்
நிகரிலாவில்லற நெறிவழாத்தூயன்
புகழ்மிகுகிருஷ்ண சாமிபுலவனாற்
கரலிகிதத்திற் கலந்தவழூஉக்களை
ஒருங்குகளைவித் தொண்பொருணல்கி
மெச்சிநாவலர்க ளுச்சிமேற்கொள்ள
அச்சுதன்பரவா னடியவரெவரும்
ஓங்கியவன்பி னுளமிகக்களிப்பப்
பாங்குசேரச்சிற் பதிப்பித்ததவினன்
கடிமிகுமதுவார் கமலநாண்மலர்
தொடியுலாமென்கைச் சுரிகுழற்கயற்கண
ணிளமுலைமடவா ரெழின்முகங்காட்டும்
வளநீர்வையை நதியொடுவாவி
செறிதருபாண்டித் திருநாடதனில்
அறிவுருவாய வரன்றிருக்கோயிலும்
மாடகூடமும் மாளிகைநிரையும்
நீடியமதிலும் நிகரிலாமறுகுஞ்
செந்நெலார்வயலுஞ் செழும்பூம்பொழிலுந்
துன்றுநெற்குப்பைத் தொன்னகருறைவோன்
பொன்னார்காவிரி ப்பூம்பட்டணத்துத்
தென்னார்வணிகர் தங்குலதிலகன்
போற்றுசீர்ப்பழனி யப்டவேள்புரி
சாற்றருமாதவந் தனிலவதரித்தோன்
வாய்மைநிறைபொறை வாய்ந்தநல்லொழுக்கினன்
ஏயவெண்ணீறுகண் டிகையெழின்மேனியன்
முருகுலாமுல்லைத் தெரியலார்மொய்ம்பினன்
மருவுசுற்றந்தழீஇ வாழுமாண்பினன்
அளகையம்பதியா னனையதிருவினன்

உளநற்கலையெலா மொருங்குணரறிவினன்
நவமிகுகற்பக நாணுங்கரதலன்
சிவனடியிணைக்கே செலுத்துபேரன்பினன்
திக்கோரெட்டினுஞ் செறிபெரும்புகழான்
மிக்கோர்நேயன் விற்பனர்சகாயன்
அருமையோடண்ணு மலையெனவழைக்குங்
கருதுசீர்ப்பெரிய கருப்பபுண்ணியனே.

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

காப்பு.

கணபதி துதி.

நேரிசை வெண்பா.

ஒன்றுதியோரெழுபத்தொன்றிறாய்மூவர்தமிழ்ச்
சென்றூர்சிவதலங்கள் செப்புதற்கு - நின்று
கடக்குஞ்சரமுகனேர் காய்விழியானீன்ற
கடக்குஞ்சரமுகனே காப்பு.

சபாபதி

ஆதிநடு வந்தமிலா வளவில்சோதி
யருண்ஞான மூர்த்தியா யகிலமீன்ற
மாதினையு மொருபாகத் தடக்கிவானோர்
மகுடசூளா மணியாய் வையம்போற்றப்
பாதிமதி யணிபவளச் சடைகடாழப்
படரொளியம் பலத்தாடும் பரனார்பாதத்
தாதுமலி தாமரைகள் சிரத்தேவைத்துத்
தளராத பேரன்பு வளராநிற்பாம்.

உமாமகேஸ்வரி.

ஈசனரு ளிச்சையறி வியற்ற லின்ப
மிலயமொடு போகமதி காரமாகித்
தேசுருவ மருவுருவ முருவமாகித்
தேவியுமாய்த் தேசமொடு செல்வமாகிப்
பேசரிய வுயிரையெலாம் பெற்றுநோக்கிப்
பெரும்போக மவையளித்துப பிறப்பினையு
(மொழித்திட்
டாசகலு மடியருளத் தப்பனுடனிருக்கும்
அன்னையருட் பாதமலர் சென்னிவைப்பாம்.

கந்தசுவாமி.

அருமறையாகம மங்கமருங்கலை நூறெரிந்த (சை
வகத்தியனுக்கோததுரைத்தமருட்குருவாங்குரு
திருமறைமாமுனிவர் முனிதேவர்கடந்தேவன்
சிவனருள்சேர்திருமதலைதவநிலையோர்தெய்வம்
பொருமறையார் கழல்வீரர் வீரன்கையிற்
பூநீர்கொண்டோவாது போற்றுமடியவர்கள்
கருமறையா வகையருளிக் கதிவழங்குங்கந்தன்
கழலிணைக ளென்சிரத்திற் கருத்திலவைப்பாம்.

நாலவர்.

ஞானத்தாய் திருமுலைப்பா லன்கயின்றமறைக்
கொழுந்தை நலிகற்றூணும், பீனத்தாற் கடலக
டந்த பெருந்தகையை யிடங்கரின்வாய்ப் பிள்ளை
யீய்ந்த, தானத்தான்றனைநரியைப் பரியாக்குஞ் சி
த்தனைத்தன்றனிநாவார, மோனத்தாம் பாசுரங்க
ண் மொழிந்துயர்ந்தமாமணியை முன்னிவாழ்வாம்.

அறுபத்துமூவர்.

அத்திமான்கலைமானைந்தருநிழன்மா னயில்விழிக்க
ஞசனமமைத்த, புத்திமானென்றேகடுவடையா
ளம் பொறித்தகநதரமுள பெம்மான், சத்திமான்
காழித தடவரையம்மான்றன்னடிநீழலையடைந்த,
முத்திமானனவோராறுபத்துமூவர்தாள் சிரமிசை
முடிப்பாம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

தேவாரத்திருப்பதிகமுள்ள சிவஸ்தலங்கள்.

ஈண்டுபுகழ்ச்சோணாட்டி லொருநூற்றுத் தொண்
ணூறீழத்திரண்டு, பாண்டியிலீரேழ்மலைநாட்டொ
ன்றுகொங்கேழ்மகதமிருபத்திரண்டு, பூண்டதொ

ஞ்டைநன்னாட் டெண்ணைந்து நூறுமொன்று வட
புலத்தைத்தாக, வாண்டசிவஸ்தலமிருநூற் றெ
ழுபத்து நான்குதொகை யாகுமனமே.

திருச்சிற்றம்பலம்.

திருப்பதிக்கோவை.

எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

கோயிறிருவேட்களநெல்வாயில் கழிப்பாலை
குலவுபெருமண மயேந்திரப்பள்ளிமுல்லை
வாயில்கலிக்காமூர் சாய்க்காடு திருப்பல்லவ
னீச்சரம்வெண்காடு வளர் திருக்காட்டுப்பள்ளி
தாயிலான்குறுகாவூர் காழிகோலக்கா
தருக்கிளர்புள்ளிருக்குவேளூர்கண்ணார்கோயில்
நோயிலொலிக்கடைமுடியே நின்றியூர் புன்கூர்
நாடியநீடூரன்னியூர் வேள்விக்குடியே. (௧)

கருத்தெதிர்கொள்பாடி மணஞ்சேரி திருக்கொறு
க்கை, கருப்பறியலூர்கதியே காட்டுக்குரக்குக்கா
மருவும்வாள்கொளிபுத்தூர்மண்ணிப்படிக்கரையே
வளர்திருவோமாம்புலியூர் கானாட்டுமுள்ளூர்
திருநறையூர் கடம்பூர் பந்தணைநல்லூர்பொன்
திகழ்கஞ்சனூர்கோடிகா மங்கலக்குடியே
திருப்பனந்தாளாப்பாடி சேய்ஞலூர்திருந்து
தேவன்குடி திருவியலூர் திருக்கொட்டையூரே. ()

இன்னம்பர்திருப்புறம்பயம்விசையமங்கை
இயல்வைகாவூர் நல்வடகுரங்காடுதுறையே
பின்னைய[illegible]பழனமையா றுநெய்த்தானம்
பெரும்புலியூர்மழபாடி திருப்பழுவூர்கானூர்
அன்னவ[illegible]துறை மாந்துறை பாற்றுறை
யே, யானைக்[illegible]பைஞ்ஞீலி பாச்சிலாச்சிராமம்
மன்னுமீங்[illegible]லியீரோடை றுபாள்மூன்றே
வடகரையி[illegible]னபால் வாட்போக்கியாமே. ()

கடம்பந்துறை பராய்த்துறைக் கற்குடிமூக்கீச்ச
ரமுங், கருதுதிரிச்சிராப்பள்ளி திருவெறும்பியூரே
நெடுங்களமேலைச்காட்டுப் பள்ளியாலம்பொழில்சீ
ர், நிகழ்திருப்பூந்துருத்தி கண்டியூர் சோற்றுத்து
றைமா, லடுவேதிகுடிதென் குடி திட்டப்புள்ளமங
கை, யணியார்சக்கரப்பள்ளி யருங்கருகாவூரே
படர்பாலைத்துறைநலூர் திருவாரூரதனிற்
பசுபதீச்சுரஞ்சத்தி முற்றம்பட்டீச்சரமே, (௪)

ஆறைவடதளி திருவலஞ்சுழியல்குடமூக்
கிற்கிழக்கோட்டங் காரோண நாகீச்சரமே
கூறுமிடைமருதுகுரங் காடுதுறைநீலக்
குடிவைகன்மாடக் கோயினல்லங் கோழம்பம்
சாறயராவடுதுறைவண் டுருத்திதிருவழுந்தூர்
சகம்புகழ்மாயூரம் விளநகர்பறியலூரே
வீறுசெம்பொன்பள்ளி நனிபள்ளி வலம்புரமே
வியன்றலைச்சங்காடாக்கூர்விளங்குகடவூரே. (௫)

திருக்கடவூர்மயானமொடு திருவேட்டகுடியே
தெளிச்சேரிதருமபுரம் நள்ளாறுகோட்டா
றுரைக்குமன்பர்பெருந் திருக்கோயின் மாகாளம்
முயர்மீயச்சூரிளங்கோயிற் றிலதைப்பதிபூ
மருக்கமழ்பாம்புர நற்சிறுகுடிவீழிமிழலை
வன்னியூர்கருவிலிமன் பேணுபெருந்துறையென்
கருத்துடைக்கு நறையூர்ச் சித்திச்சரத தோடரி
சிற
கரைபுத்தூர்சிவபுரங் கலயநலூர்தானே. (௬)

கருக்குடிவாஞ்சியந் திருநன்னிலத்துப்பெருங
கோயில்
கருதுகொண்டீச்சரம் பனையூர் விற்குடி தென்புக
லூர்,
இருக்கும் வர்த்தமானீச்சர மிராமநந்திச்சரமே

யியல்பயற்றூர் செங் காட்டங்குடிமருகலிருளை
முருக்கு திருச்சாத்தமங்கை நாகைக்காரோண
முன்றி றிருச்சிக்க றிருக்கீழ்வேளூர் தேவூ
ரரிக்கரியான் பள்ளியின் முக்கூட றிருவாரு
ரறநெறி மூலட்டானம் பரவையுண்மண்டளியே ()

மேலாகும்விளமர் கரைவீரம்பெருவேளூர்
மிளிர்தலையாலங்காடு குடவாயில்சேறை
நாலூர்மயானங் கடுவாய்க்கரைப்புத்தூரே
நவிலுமிரும்பூளை திருவரதைப்பெரும்பாழி
மாலூருமவளிவ ணல்லூர் பருதிநியமம்
வாழ்வெண்ணிப் பூவனூர்பாதாளேச் சரநீர்ச்
சேலூருந்திருக்களர் சிற்றேமமுசாத்தானந்
திருவிடும்பாவனத்தோடுசேர்ந்தகடிக்குளமே.(அ

தண்டலைநீணெறிகோட்டூர்வெண்டுறையோடமு
கே, தருகொள்ளம்பூதூர் பேரெயில்கொள்ளிக்கா
டு, கண்டருதெங்கூர் நெல்லிக்கா நாட்டியத்தான்
குடியே, காராயில் கன்றாப்பூர் வலிவலங்கச் சினந்
தோ, டண்டர்பிரான் கோளிலிதென்றிருவாய்மூர்
மறைகா, டகத்தியான்பள்ளி கோடிக் குழகருந
தென்கரையில், எண்டகுநூற்றிருபத்தே ழிப்பா
லீழத்தி, லிசைகோண மாமலை கேதிச்சரமென்றி
ரண்டே. (கூ)

ஆலவாயாப்பனூர் பரங்குன் றேடகத்தோ
டருங்கொடுங்குன்றந்திருப்புத்தூர்புனவாயிலிறோ
டேலுமிராமீச்சர மாடானை கானப்பே
ரெழிறிருப்பூவணஞ் சுழியலின்புறு குற்றாலம்
பாலலோசனன் றிருநெல்வேலியொடும்பான்,
பதினான்குமலைநாட்டி லஞ்சைக்களமொன்றே

சிலமிகுமவிநாசி திருமுருகன்பூண்டி
திருநணுக்கொடிமாடச் செங்குன்றூர்தானே. (௰)

வெஞ்சமாக்கூடல் கொடுமுடிகருவூர்கொங்கின்
மேவுமேழறத்துறை வெண்டுங்கானேமாடம்
எஞ்சலில்கூடலையாற்றூ ரெருக்கத்தம்புலியூ
ரிணையகலுந்தினைநகர் சோபுர மதிகபுகழே
விஞ்சுதிருநாவலூர் முதுகுன்றந்திருநெல்
வெண்ணெ திருக்கோவலூ ரறையணிநல்லூரே
மஞ்சுதிகழிடையாறு வெண்ணெநல்லூர் துறையூர்
வடுகூர்வீடேயருளுந் திருமாணிக்குழியே. (௰க)

தண்ணார்தண்டலைப் பாதிரிப்புலியூர்முண்டீச்
சரம்புரவார் பனங்காட்டூர் திருவாமாத்தூரே
எண்ணாரண்ணமலையு நடுநாட்டிலிருபத்
திரண்டாகுமிப்பாலே கம்பமேற்றளிவிண்
கண்ணேங்குமதிளோண காந்தன்றளியனேக
தங்காவதநு கச்சிநெறிக் காரைக்காடே
உண்ணடுகுரங்கணின் முட்டந் திருமாகறலோத்
தூர்வன்பார்த்தான்பனங்காட்டூர்வல்லமாற்பேறே.

உளறலிலம்பயங்கோட்டூர்விற்கோலமாலங்கா
டுயர்பாசூர் வெண்பாக்கங் கள்ளிற்காளத்தி
மாறிறிருவொற்றியூர் வலிதாயம்பாலி
வடமுல்லைவாயில் வேற்காடு மயிலாப்பூர்
ஈறிலாவான்மியூர் கச்சூராலக்கோயி
லிடச்சுரமுங் கழுக்குன்ற மச்சிறுபாக்கம்மே
மாறில்புகழ் வக்கறையோ டரிசிலிதொல்லிரும்பை
மாகாளந் தொண்டைநாட் டெண்ணின் முப்பானி
ரண்டே, (௰௩)

கோகன்னங் குழுவதேயத்திலொன்றேயிப்பாற்
குலவுபருப்பத நீலப்பருப்பத மம்பிகைதன்
பாகரனேகதங் காவதங் திருக்கேதாரம்
பகர்நொடித்தான் மலைவடக்கிற் பதியைந்தோடி
வையோ- டாகவிருநூற்றெழுபா றென்கென்பமூவ
ரருட்பதிகமிருக்குமூ ரதிகமாம்வைப்புத் (கள்
தாகமுடன்றுதிப்போர்க்குநினைப்போர்க்கும் வினை
சாராவாம்பிறப்பகலுஞ்சத்தியமுந்தியுமே. (மச)

திருப்பதிகசோவை முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

திருப்பதிகக்கோவை.

ஷை விருத்தம்.

பன்னுசிவதலமொருநூற் றைம்பதிற்றுமூன்று
பதிகமொன்றுநாற்பத் தொன்பதிற்பதிகமிரண்டா
முன்னுமிருபானெட்டுநகர் பதிகமூன்று
மொருபதின்னோர் தலங்களுக்குமொருநான்கென்று
ணாக, மன்னுமிருநான்குதலமோரைந்தேபதிக
மற்றுமைந்து தலங்களுக்கு வரும்பதிகமாறும்
பின்னுமைந்துவளநகர்க்குப் பெறும்பதிகமேழாம்
பெயர்த்துமொருநான்குதலம் பெறும்பதிகமெட்
டே. (க)

பரவுமொருநான்குதலம் பதினென்றும் பதிகம்
பன்னுமிருதலம்பதிகம் பன்னிரண்டாய்ப்பகரு
முரைசெயிருதலம்பதிகம் பதினெட்டாமிப்பா
லொருமூன்று தலங்களுக்கு முறும்பதிகமுனாக்கி
னிரவிவருமறுநான்கு முப்பதிற்றுநான்கு
நீடெழுபத்தொன்றுமென நிரைநிரையுமாகக்

கருதுசிவ தலமிருநூற்றெழுபத்தினான்கின்
கடைக்காப்போ ரெழுநூற்று நாற்பத்தொன்பா
னே. (உ)

திருப்பழுவூர் சேய்ஞலூர் திருமுல்லைவாயி
றிருவைகாகொடிமாடச் செங்குன்றூர்வியலூர்
கருக்குடி தெங்கூர்பனந்தாட்கலிக்காமூர் தலைச்சங்
காடுமயேந்திரப்பள்ளி கச்சினங் கன்றாப்பூர்
குரக்குக்கா பெரும்புலியூர் திருக்காட்டுப்பள்ளி
குடந்தைக்கீழ்க் கோட்டமொடு குடந்தைக்காரோ
ண, மெருக்கத்தம்புலியூர்வெண்டுறைகண்ணார்கோ
யி, லிலம்பயங்கோட்டூர்சிக்கலிராமநதிச்சரமே. ()

பள்ளியின்முக்கூட றிருவிரும்பூளையாலூர்ப்
பசுபதீச்சரம் பாலைத்துறை பருதிநியமங்
கள்ளில்குரங்கணின்முட்டந் திருமுருகன்பூண்டி
கஞ்சனூர் கச்சிநெறிக்காரைக்கா டோத்தூர்
புள்ளமங்கை நாட்டியத்தாங்குடி கலையநல்லூர்
புக்கொளியூ ரவிநாசிபூவனூர் துறையூர்
கொள்ளிக்காட்டிடைச்சுர மச்சிறுபாக்கம்விளமர்
கொட்டையூர்கொடுங்குன்றங்கூடலையாற்றூரே. ()

நெல்வேலிதிருவழுந்தூர் தரும்புரம்பயத்தூர்
நெடுங்களம் வக்கரை யிரும்பைமாகாளம்வடுகூர்
நெல்வெண்ணெ வடகரைமாந்துறை திருவிற்கோல
ம், நீடூர்சக்கரப்பள்ளி யகத்தியான்பள்ளி
நெல்வாயில்பேணுபெருந்துறை நாலூர்மயானம்
நெல்லிக்காவிற்குடி வீரட்டமதிமுத்தம்
வல்லமறையணிநல்லூர் தலையாலங்காடு
வாட்போக்கி திருநாவலூர் மயிலாப்பூரே. (ரு)

திருவாரூர்ப்பரவையுண் மண்டளிசாத்தமங்கை
சிற்றேமந்தெளிச்சேரி திருவுசாத்தானங்

கரவீரந் திருவாலம்பொழில்வெண்ணிநல்லூர்
கச்சனநெல்லிக்காவதங்கோடிக்குழகர்
அரிசிலின் றென்குடித்திட்டைவடமுல்லைவாயி
லம்பர்ப்பெருந் திருக்கோயில்வெண்பாக்கஞ்சீயல்
பெருமணமிக திரநீலப் பொருப்புதம்வேற்காடு
பேரெயில்பாத்துறைமுக்கீச்சரமுண்டீச்சரமே. (சா

பறியலூர்வீரட்டங்கானாட்டுமுள்ளூர்
பாதாளீச்சர மெதிர்கொள்பாடி வலிதாயஞ்
சிறுகுடிகச்சூராலக்கோயில் கொள்ளம்புதூர்
திருப்புரவார்பனங்காட்டூர் விரிசுகர் தண்டலைநீ
ணெறியரனைப்பெரும்பாழிநல் கருவூரா (ந்
னிலையிடும்பா வனங்கடுவாய்க்கரைப்புத்தூர்கடம்ப
துறைதிருவேட்கண் திருவஞ்சைக்களமாகாளை
சோபுரங்காறயில் வடகுரங்காடுதுறையே. (எ)

திருமாணிக்குழி வேட்டக்குடி திருவாப்பாடி
திருத்துதேவன்குடி மாகிறல் சத்திமுற்றந்
திருவாப்பனூர்மீயச்சூ ரவ்வூர்தன்னிற்
சிறந்த திருவிளங்கோயில் வெஞ்சமாக்கூட
திருநீலக்குடி மண்ணிப்படிக்கரை நந்நிலத்துப்
பெருங்கோயி லிருக்கொத் திருப்பட்டீச்சரமே
திருவியந்கோய்மலைவன்பாத்தான்பனங்காட்டூர்
திருப்புகலூர்வர்த்தமானீச்சரம்பாம்புரமே. (அ)

கடைமுடியேயோமணக்காந்தன்றளி கோட்டூர்வை
கன்மாடக்கோயிலிடையா றுபழையாறை
வடதளிநற்றிருக்காரங் கோணமாமலைசீர்
வன்னியூர்கருவிலியனேகதங்காவதநல்
லிடைமருவு கடிக்குளநற் றிருக்களரென்றிவைகட்
கிரும்பதிகமொவ்வொன்றேயிசைத்திடுக விப்பாற்

குடவாயில் புனவாயி றாங்கானைமாடங்
கோழம்பமவளிவணல்லூர் கோல்க்காவே. (கூ)

குருகாவூர் திருவேள்விக்குடி விசையமங்கை
குற்றாலங் குடமூக்கு கோட்டாறு பனையூர்
கருகாவூர் குரங்காடுதுறை யோமாம்புலியூர்
கண்டியூர்வேதிகுடி கானூர் கோகன்னநந்
திருவாரூராற்நெறி பந்தணைநல்லூர் நல்லந்
திருக்கொண்டீச்சரங்கீவூர் திரிச்சிராப்பள்ளி
பெருவேளூர் கீழ்வேளூ ரெறும்பியூர் கான்ப்
பேர்திருமநகல்க்குடி யாக்கூர் கோவலூரே. (ம)

திருப்பாங்குன்றந்திருப்பாதிரிப்புலியூர்குறுக்கை
திருப்புத்தூர்மணஞ்சேரிபாச்சிலாச்சிராமங்
கருப்பறியலூர் கேதீச்சரங் கேதாரங்
கச்சிமேற்றளி திருமேலைக்காட்டுப்பள்ளி
அருத்தியுறும்பட்டினத்துப் பல்லவனீச்சரம்பே
ரன்பிலாலந்துறை பாய்த்துறை வேட்களமிங்
2 ✗ குரைத்தசீர் வன்னியூரிவ்விரண்டாம்பதிக /
முள்ளதலந்திருக்கடவூர்மயானம்வாஞ்சியமே. (மக

துருத்திதிருநனிப்பள்ளி திருமருகறிருப்பூந்
துருத்திபுரம் பியங்கடம்பூர் புள்ளிருக்கும் வேளூர்
அரத்துறைவாட் கொளிபுத்தூர்வான்மியூர்பாசு
ரம்பர்மாகாள மயிலாடுதுறை வாய்மூர்
திருக்கழுக்குன்றம் பாண்டிக்கொடுமுடிராமீசஞ்
செங்காட்டங்குடிவெண்ணி திருச்செம்பொன்பள்
ளி, பருப்பதம் புன்கூரரிசிற்கரைப்புத்தூர்சேற்ற
3 ✗ பஞ்ஞீலிக்குடிமாமலைப்பதிகமூன்றே. / (மஉ)

வலம்புரமாலங்காடு சிவபுரங்காளத்தி
வலிவலஞ் சாய்க்காடு திருக்கோடிக்கா நகர

நலந்திகழும் பூவணங்கோளிலிநின்றியூரே
நறையூர்ச்சித்தீச்சரமு நான்காகும் பதிகம்
வலஞ்சுழிநல்லூர் பழனமாமாத்தூரண்ணா
மலைகடவூரின்னம்பர் நாரையூரைந்தா
நிலந்திகழ்நாகேச்சர மாற்பேறுமழபாடி
நெய்த்தானம் வெண்காடு நீள்பதிகமாறே. (௰௩)

கைலாயமானைக்கா நள்ளாறு நாகைக்
காரோணந் திருச்சோற்றுத்துறையேழுபுகலூர்
வயலாருங்கழிப்பாலையொற்றியூர் திருவா
வடுதுறையெட்டாந்தில்லை மறைக்காடமதுரை
யியலாருமுதுகுன்றம் பதினொன்றுகச்சி
யேகம்பமிடைமருதீராறையாறதிகை
யயலீரொன்பான்வீழியாரூர் சிகாழி
யறுநான்குமுப்பானான்கெழுபத்தொன்றுமே. (௰௪)
திருப்பதிக்கோவை முற்றிற்று.

வேறு.

திருஞானசம்பந்த ரருளிச்செய்த
திருப்பதிகம்பொதுவகையாலேழ்தாகு
மருண்ஞானத்தவமுனிவர்முப்பத்தேழா
மாரூரனம்பியொருநான்காமாக
வருஞானத்திருப்பதிகநாற்பத்தெட்டா
மற்றுமிந்தப்பதிகமொடு மறைதேர்மூவர்
இருநாவான்மொழிந்த திருப்பதிகம்யாவு
மியம்பிலெழுநூற்றுத்தொண்ணூற்றேழன்றே.
திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ வேதாகம விபவானந்த சாக்ஷாத்கார மாயும் பரிபூரணராயுஞ் சச்சிதானந்தராயும் விபுவாயும் அருவாயும் உருவாயும் அருவுருவமாயும் ஆதிமத்தியாந்த ரகிதராயும்விளங்கு மெண்குணக் கடவுளாகிய நம்மிறைவரான பரமேஸ்வரன் தன தடியார்களுடைய பக்குவா பக்குவத்துக்குத் தக்கபடி சாலோக சாமீப சாரூப சாயுச்சிய பதங்கள‌ை யளித்தாள்வதற்கான திருவுருவுடனெழுந்தருளி யிருக்கின்ற திவ்வியக்ஷேத்திரங்களினது திருநாமங்களு மத்தலங்களிற் கருணுமுகுர்த்தமா யெழுந்தருளியிருக்குஞ் சிவபிரானது காரணப்பெயராகிய திருநாமமும் அச்சிவபிரான் திருவாமத்தமைந்த உமாமகேஸ்வரியாய அருட்சத்தியின் திருநாமமும் அத்தலதீர்த்தமும் விருக்ஷமும் முக்கிய மானமான்மியங்களும் அங்ஙனம் பேறுற்றநாயன்மார்களின் திருநாமமும் சமயாசாரியர்களில் மூவருளிய திருப்பதிகமுள்ள தொகையும் ஒவ்வொரு தலங்களினின்று மற்றொரு திருப்பதிக்கேகுங் கடிகையி னளவுந் திக்கும் அறிந்தவா றியம்புவா னெடுத்துக்கொண்டங்ஙனங் கூறியபடியே எந்நாட்டினுஞ் சிறப்புற் றோங்கிய தென்னுடாகிய சோழவளநாட்டிற் காவேரியின் வடகரையில் திருக்கோயிலென்னுஞ் சிதம்பரம் ஆதியாகக் கூறுகின்றும்.

திருச்சிற்றம்பலம்.

காவேரியின் வடகரையில்.

முதலாவது. கோயில் என்பது சிதம்பரம் அதில் எழுந்தருளி யிருக்கின்ற நித்தியானந்த வைபவராகிய மூர்த்தி சபாநாயகர். தேவியார் சிவகாமவல்லியம்மை. ஷை திருமூலட்டானம் சிதம்பரேசர

ரென்னுந் திருமூலநாதர் உமையம்மை அத்திவ்விய க்ஷேத்திரத்திற் றேவியாராகிய சிவகாமவல்லியம்மை வாமநின்று திருநோக்குற்று மகிழவும் பதஞ்சலிவியாக்கிரமபாதராகிய முனிவரர் முதலிருடிகளும் பிரம விஷ்ணு இந்திராதி தேவர்களும் பேரானந்தத்தின் மூழ்கவும் நம்பெருமானாகிய சபாநாயகர் பேரம்பல சபைக்கதிபராய்ச் சிற்சபையினின்று வலது திருவடியை முயலகன் மீதூன்றி யிடதுதிருத்தாளை யெடுத்துக் குஞ்சிதபாதத்தைக் காட்டிச் சதாகாலமும் இரக்ஷதாண்டகமாகிய பரமானந்த நடனஞ் செய்தருளுகின்ற தலம் தில்லை மூவாயிரவர் பூசிக்குந் தலம் சமஸ்த தலங்களிலுள்ள சிவகலைகளனைத்தும் அர்த்தயாமத்தில் வந்தொடுங்கிப் பின் செல்லாநிற்குந் தலம் சிவகங்கை தீர்த்தம்பரமானந்தத்தீர்த்த முதலியன ஆலவிருட்சம் மாணிக்கவாசகசுவாமிகள் திருநாளைபபோவார் நாயனர் திருநீலகண்டநாயனர் உமாபதிசிவாசாரியார் ஆனந்த முத்தியுற்றதலம் இதற்கு ஆளுடைய பிள்ளையாரென்னுந் திருஞானசம்பந்த மூர்த்திசுமாமிகள் அருளிச்செய்த திருப்பதிகம் உ- ஆளுடைய வாகீசராகிய அப்பர்சுவாமிகளென்னும் திருநாவுக்கரசு சுவாமிகளருளிச்செய்த திருப்பதிகம் அ- ஆளுடைய நம்பியாரூரரெனனும் சுந்தரமூர்த்தி சுவாமிகளருளிச்செய்த திருப்பதிகம் க-ஆக ௰க- அத்தலத்தின் றென்கிழக்கிரண்டுகடிகைதூரத்தில்

உ. திருவேட்களம் எ- து மூங்கில்வனம்சுவாமி பாசுபதேசுரர் அம்மன் நல்லநாயகி தீர்த்தம் சிவகங்கை திருஞானபதிகம் க - திருநாவுபதிகம் க - ஆக உ. அதற்கு தெற்கு க - கடிகையில்.

௩. திருநெல்வாயில் எ-து சிவபுரிசுவாமி உச்சிராதேஸ்வரர் அம்மன் கனகாம்பிகை தீர்த்தம் கிருபாசமுத்திரம் திருஞானபதிகம் ௧- அதற்குத் தெற்கு ௨- கடிகையில்.

௪. திருக்கழிப்பாலை எ-து காரைமேடு சுவாமிபால்வண்ணேஸ்வரர் அம்மன் பொற்பதவேத நாயகி தீர்த்தம் கொள்ளிடம் திருஞானபதிகம் ௨- திருநாவுபதிகம் ௫- சுந்தர பதிகம் ௧- ஆக ௮. அதற்குத் தென்கிழக்கு ௫. கடிகையில்.

௫. திருப்பெருமணம் எ-து ஆச்சாபுரம் சுவாமிசிவலோகத்தியாகேசுரர் அம்மன் நங்கையுமையம்மை பஞ்சாக்கர தீர்த்தம் திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் திருமணங்காணவந்த திருநீலகண்டத்து யாழ்ப்பாணநாயனர் முருகநாயனர் திருநீலநக்கநாயனர் மற்றுஞ்சில அடியார்களுடன் ஆளுடையபிள்ளையாரும் சோதியிற்கலந்ததலம் திருஞானபதிகம் ௧- அதற்கு வடகிழக்கு ௩. கடிகையில்.

௬. திருமயேந்திரப்பள்ளி எ-து கோயிலடிப்பாளையம் சுவாமி திருமேனியழகர் அம்மன்வடிவாளம்மை தீர்த்தம் மந்திரபுஷ்கரணி திருஞானபதிகம் ௧. அதற்குத் தெற்கு ௰. கடிகையில்.

௭, திருமுல்லைவாயில் எ-து தென்திருமுல்லைவாயில் சுவாமி முல்லைவனநாதர் அம்மன் கோதையம்மை சக்கரதீர்த்தம் திருஞானபதிகம் ௧. அதற்குத் தென்மேற்கு ௨௭ கடிகையில்.

௮. திருக்கலிக்காமூர் எ-து அன்னப்பன் பே

ட்டை சுவாமி சுந்தரேஸ்வரர் அம்மன் அழகுவன மூலையம்மை அம்புலி தீர்த்தம் திருஞானபதிகம் க. அதற்குத் தெற்கு ௩. கடிகையில்.

௯. திருச்சாய்க்காடு எ-து சாயாவனம் சுவாமி சாயாவனேசுரர். அம்மன் குயிலினு நன்மொழியம்மை சங்கமுகதீர்த்தம் திருஞானபதிகம் உ- திருநாவு பதிகம் உ- ஆக ச. அதற்குக் கிழக்கு ௦ கடிகையில்.

௰. திருப்பல்லவனீச்சரம் எ-து காவேரிப்பூம்பட்டினம் சுவாமி பல்லவனப் பூரணேசுரர் அம்மன் சௌந்தரியம்மை திருஞானபதிகம் உ- இயற்பகை நாயனுர் வழிபட்டதலம் அதற்கு வடமேற்கு உ௦ கடிகையில்.

௰க. திருவெண்காடு சுவாமி சுவேதாரண்யேசுவரர். அம்மன் பிரமவித்தியாநாயகியம்மை. தீர்த்தம் சோமசூரியாக்கினியாகிய முக்குளம். விருக்ஷம் வடவால். திருஞானபதிகம் ௩. திருநாவுபதிகம் உ. சுந்தரபதிகம க. ஆக ௬. அதற்கு மேற்கு முக்காற் கடிகையில்.

௰உ. திருக்காட்டுப்பள்ளி சுவாமி ஆரணிய சுந்தரர். அம்மன் அகிலாண்டநாயகியம்மை. தீர்த்தம அமிர்தப்பொய்கை. திருஞானபதிகம் க. அதற்கு வடமேற்கு ச. கடிகையில்.

௰௩. திருக்குறுகாவூர் சுவாமி திருமேனி வெள்ளடையீசுரர். அம்மன் காவியங்கண்ணியம்மை. தீர்த்தம் வெள்ளடை. திருஞானசம்பந்தமூர்த்தி

சுவாமிகளுக்குத் தை யமாவாசையிற்றிருவருளாற் றுகசாந்தி செய்வித்த கூபதீர்த்தம். அதற்கு வடகிழக்கு க. கடிகைதூரம் சிவபெருமான்சென்று சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குச் சித்திராபருவத்தில் கட்டமுது கொடுத்து வேடரூபமா யாலயத்துக் கழைத்துவந்து மறைந்தனர். திருஞான பதிகம் க. சுந்தர பதிகம் க. ஆக உ. அதற்குத் தென்மேற்கு ௩. கடிகையில்.

௰௪. திருச்சீர்காழி சுவாமி பிரமபுரி ஈசுரர் அம்மன் திருநிலைநாயகியம்மை பிரமதீர்த்தம் கழுமலநதி ஆவணி மீ திருவாதிரையில் ஆளுடைய பிள்ளையாரென்னுந் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருவவதாரம் ஆதிசைவ பிராமண மரபு அரனைப்பாடுந் திருத்தொண்டு அம்மையார் ௵ சுவாமிகளுக்கு ௩. வயதில் சித்திரை மீ சட்டி திதியில் ஞானப்பாலூட்டினர். அத்தலம் பன்னிரண்டு திருநாமங்களுடையது. திருஞான பதிகம் சு௰எ. திருநாவு பதிகம் ௩. சுந்தர பதிகம் க. ஆக எ௰க. அதற்குத் தென்மேற்கு ௭ கடிகையில்.

௰௫. திருக்கோலக்கா எ-து திருத்தாளமுடையார்கோயில் சுவாமி சப்தபுரியீசுரர் அம்மன் ஓசைகொடுத்த நாயகி சூரிய தீர்த்தம் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகட்கு சுவாமி திருத்தாளங் கொடுக்க அதற்கம்மை ஓசைகொடுத்ததாக ஐதிகம். திருஞான பதிகம் க. சுந்தரபதிகம் க. ஆக உ. அதற்கு மேற்கு ௩. கடிகையில்.

௰சு. திருப்புள்ளிருக்கும் வேளூர் எ-து வயித்தீசுரன்கோயில் சுவாமி வயித்தியநாதக் கடவுள்

அம்மன் தையனாயகி யம்மை. தீர்த்தம் சிற்றாமிர்தம் விருக்ஷம் வேம்பு வேதம் சூரியன் சுப்பிரமணியர் சம்பாதி சடாயு இராமசுவாமி இலக்குமணர் முதலியோர் பூசித்துத் திருவருட்பெற்ற தலம். திருஞானபதிகம் க. திருநாவு பதிகம் உ. ஆக ௩. அதற்குத் தென்கிழக்கு க. கடிகையில்.

௰எ. திருக்கண்ணார்கோயில் எ-து குறுமாணக்குடி சுவாமி கண்ணாயிரேசுரர் அம்மன் முருகுவளர்கோதைநாயகி தீர்த்தம் மணிகர்ணிகை. திருஞான பதிகம் க. அதற்குத் தென்கிழக்கு ௩. கடிகையில்.

௰அ. திருக்கடைமுடி எ-து கிழையூர் சுவாமி கடைமுடியீசுரர் அம்மன் அபிராமவல்லி. தீர்தம் கடைமுடி. திருஞான பதிகம் க. அதற்குவடமேற்கு ௩. கடிகையில்.

௰௯. திருநின்றியூர் சுவாமி மகாலெக்ஷிமிநாதர் அம்மன் உலகநாயகி. தீர்த்தம் நீலமலர்ப் பொய்கை. திருஞான பதிகம் க. திருநாவு பதிகம் க. சுந்தர பதிகம் உ. ஆக ச. அதற்கு வடமேற்கு மூன்று கடிகையில்.

உ0. திருப்புன்கூர் சுவாமி சிவலோகநாதர். அம்மன் சொக்கநாயகி. இடபதீர்த்தம். திருஞான பதிகம் க. திருநாவு பதிகம் க. சுந்தர பதிகம் க. ஆக ௩. திருநாளைப்போவார் நாயனாருக்காக நந்திசுரரை விலகச்செய்து தரிசனங்கொடுத்த தலம். அதற்குத் தென்மேற்கு ச. கடிகையில்.

20 திருப்புன்கூரும் திருநீடூரும். பொருட்பிதம் இப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

௨௧. திருநீடூர் சுவாமி அருட்சோமநாதர். அம்மன் வேயுறுதோளியம்மை. தீர்த்தம் செங்கழுநீரோடை. சுந்தர பதிகம் ௧. முனையடுவார் நாயனார் முத்தியடைந்த தலம். அதற்கு மேற்கு ௨. கடிகையில். [illegible]

௨௨. திருவன்னியூர் எ-து பொன்னூர் சுவாமி ஆபத்சகாய ஈசுரர். அம்மன் பெரியநாயகியம்மை. தீர்த்தம் சிவகங்கை. திருஞான பதிகம் ௧. திருநாவு பதிகம் ௧. ஆக ௨. அதற்கு மேற்கு ௨. கடிகையில்.

௨௩. திருவேள்விக்குடி சுவாமி கலியாணசுந்தரேசுரர், அம்மன் பரிமளசுகந்தநாயகி, பங்கள தீர்த்தம், திருஞானபதிகம் ௧. சுந்தரபதிகம் ௧. ஆக ௨. அதற்கு வடமேற்கு ௧௨ கடிகையில்,

௨௪. திருவெதிர்கொள்பாடி எ - து மேலைத் திருமணச்சேரி சுவாமி ஐராவதேசுரர். அம்மன் மலர்க்குழனன்மாது, தீர்த்தம் சிவகங்கை. சுந்தரபதிகம் ௧. அதற்கு வடகிழக்கு வ கடிகையில்

௨௫. திருமணச்சேரி எ - து கீழ்த்திருமணச்சேரி சுவாமி அருள்வள்ளநாயகேசுரர், அம்மன் யாழின்மொழியம்மை, சமுத்திர தீர்த்தம், திருஞானபதிகம் ௧. திருநாவுபதிகம் ௧. ஆக ௨. குலச்சிறைநாயனார் வழிபட்டதலம் அதற்கு வடகிழக்கு ௩. கடிகையில்

௨௬. திருக்கொறுக்கை சுவாமி வீரட்டேசுரர். அம்மன் ஞானம்பிகை, சூலதீர்த்தம், திருநா

வுப்திகம் உ, இது காமதகனஸ்தலம் அட்டவீரட்டத்திலொன்று அதற்கு வடகிழக்கு ௩.கடிகையில்

உஎ. திருக்கருப்பறியலூர் எ - து தலைஞாயிறுமேலக்காழி சுவாமி குற்றம்பொறுத்தயீசுரர். அம்மன் கோல்வளையம்மை. சூரியதீர்த்தம் திருஞானபதிகம் க. சுந்தரபதிகம் க. ஆக உ. அதற்கு வடகிழக்கு க- கடிகையில்

உஅ. திருக்குரக்குக்காவில் சுவாமி கொந்தளஈசுரர். அம்மன் கொந்தளநாயகியம்மை. சுந்தரதீர்த்தம், திருநாவுபதிகம் க. அதற்கு தென்மேற்கு உ௰. கடிகையில்

உகூ. திருவாட்கொளிபுத்தூர் சுவாமி மாணிக்கவண்ணேசுரர். அம்மன் வண்டார்பூங்குழலி, பிரமதீர்த்தம் விருட்சம் வாகை திருஞானபதிகம் உ, சுந்தரபதிகம் க, ஆக ௩, அதற்கு வடமேற்கு க௰ கடிகையில்

௩0, திருமண்ணிப்படிக்கரை எ- து இலுப்பைப்பட்டு சுவாமி நீலகண்டேசுரர். அம்மன் அமுதகரவல்லி, அமுததீர்த்தம் சுந்தரர்பதிகம் க, அதற்கு வடமேற்கு உ கடிகையில்

௩க, திருவோமாம்புலியூர் சுவாமி துயரந்தீர்த்தஈசுரர். அம்மன் பூங்கொடியாம்பிகை, தீர்த்தம் கொள்ளிடம் இத்துடன் கீழ்பாரிசத்தில் வடதளி யென்றொரு ஆலயம் இரண்டிற்கும் திருஞானபதிகம் க. திருநாவுபதிகம் க, ஆக உ, அதற்குவடகிழக்கு உ, கடிகையில்

௩உ, திருகாறைட்டுமுள்ளூர் சுவாமி பதஞ்சலி நாதர், அம்மன் கோல்வளைக்கையம்மை. தீர்த்தம் புஷ்கரணி சுந்தரப்திகம் க, அதற்குவடகிழக்கு ச, கடிகையில்

௩௩, திருநாரையூர் சுவாமி சவுந்தரேசுரர் அம்மன் திரிபுரசுந்தரவல்லி காருண்யதீர்த்தம் விருட்சம் புந்நாகம் நம்பியாண்டார் நம்பி விநாயகக்கடவுளைப்பூசித்து மெஞ்ஞானமுதலியபேறுகளடைந்த தலம் திருஞானபதிகம் ௩, திருநாவுபதிகம் உ, ஆக ரு, அதற்குத்தென்மேற்கு ரு, கடிகையில்

௩ச. திருக்கடம்பூர் எ-து மேலக்கடம்பூர். சுவாமி அமுதகடநாயகர். அம்மன் சோதிமின்னம்பாள். ஆதிதீர்த்தம். திருஞான பதிகம் க. திருநாவு பதிகம் உ. ஆக ௩, அதற்குத் தென்மேற்கு அ. கடிகையில்,

௩ரு. திருப்பந்தணநல்லூர், சுவாமி பசுபதீசுரர். அம்மன் காம்பனதோழி மணவாளக்கோலம், தீர்த்தம் புஷ்கரணி. விருக்ஷம் கொன்றை. அம்மை சந்நிதி வடக்குமுகம். திருஞான பதிகம் க. திருநாவு பதிகம் க. ஆக உ. அதற்குத் தென்மேற்கு க. கடிகையில்,

௩சு. திருக்கஞ்சனூர், சுவாமி அக்கினீசுரர். அம்முன் கற்பகநாயகி. அக்கினி தீர்த்தம். விருக்ஷம் புரசு. திருநாவு பதிகம் க. மானக்கஞ்சாறநாயனர் தனது அருமைக் குமாரத்தியின் விவாகமகோற்சவ காலத்தில் அப்பெண்ணின் கூந்தலை

அடியோடரிந்து மகாவிரதசைமையப் பிராமணசீலராயும் ஆதிசைவராயும் திருவேடம் பூண்டுவந்த சிவபெருமானுக்குக் கொடுக்கநீட்டி முத்தியடைந்த தலம். அதற்குக் கிழக்கு க. கடிகையில்,

கூஎ. திருக்கோடிக்கா, சுவாமி கோடிகாயீசுரர். அம்மன் வடிவாம்பிகையம்மை. அகஸ்தியதீர்த்தம். திருஞான பதிகம் க. திருநாவு பதிகம் கூ. ஆக ச. அதற்கு மேற்கு உ. கடிகையில்,

கூஅ. திருமங்கலக்குடி, சுவாமி பிராணவரதேசுரர். அம்மன் மங்களநாயகி. மங்களதீர்த்தம் விருக்ஷம் கோங்கிலவம். திருஞான பதிகம் க. திருநாவு பதிகம க. ஆக உ. ஏயர்கோன் கலிக்காமநாயனார் சுந்தரமூர்த்தி சுவாமிகளிடத்தில் பக்தியுடையவராயிருந்து முத்தியடைந்த தலம். அதற்கு வடமேற்கு கூ. கடிகையில்,

கூகூ. திருப்பனந்தாள் சுவாமி சடையப்பேசுரர் அம்மன் பெரியநாயகி சிவலிங்கப்பெருமானை திருமாலைத்தொண்டாற்றிய தாடகையம்மாளுக்கு வளைந்தும் குங்கிலியக்கலைய நாயனாருக்கு நிமிர்ந்தும் மேன்மையுற்றதலம் பிரமதீர்த்தம் விருக்ஷம் பனை திருஞானபதிகம் க. அதற்குத்தென்மேற்கு முக்காற் கடிகையில்.

சய. திருவாப்பாடியில் சுவாமி பாலுகந்த ஈசுரர் அம்மன் பெரியநாயகி தீர்த்தம் மண்ணியாறு விருக்ஷம் ஆத்தி அர்த்த மண்டபததுக்கும் மகாமண்டபத்துக்கும் மத்தியில் உள்ளாலய சுவாமிக்குத் தீபாராதனை செய்தவுடன் சண்டேசுரருக்குத் தீபாராதனை தண்டீசநாயனார் திருவவதாரு

செய்துடலுடன் சிவபெருமான் றிருவடியில் வீற்றிருந்ததலம். திருஞான பதிகம் க. அதற்குத் தெற்கு வ. கடிகையில்,

சக. திருச்சேய்ஞலூர் சுவாமி கிரீசுரர். அம்மன் ஜெகதேவியம்பாள், சத்ததீர்த்தம், திருஞான பதிகம் க. அதற்குத் தென்மேற்கு ௩. கடிகையில்,

சஉ திருத்தேவன்குடி, சுவாமி கற்கடகேசுரர், அம்மன் அருமருந்தம்பாள், பங்கயதீர்த்தம், நண்டுபூசித்ததலம், இப்போதும் ஒருசிறப்பசுக்களின்பால் பதின்கலம் சிவலிங்கப்பெருமானார் திருமுடியில் அபிடேகஞ் செய்தா லம்முடிமீது ஒரு பொன்னிறமுடைய நண்டு ஊரத் தரிசனமாம், திருஞான பதிகம் க. அதற்குத் தெற்கு ௨. கடிகையில்.

ச௩. திருவியலூர் எ-து பண்டாரவாடைத் திருவியலூர், சுவாமி ஏகாந்தநாதேசுரர், அம்மன் சௌந்தரநாயகி, சடாயுதீர்த்தம். திருஞானபதிகம் க. அதற்கு மேற்கு ௨. கடிகையில,

சச. திருக்கொட்டையூர்," சுவாமி கோடீசுரர் அம்மன் பந்தாடுநாயகி, கோடிதீர்த்தம், திருநாவு பதிகம் க. அதற்கு வடமேற்கு கஉ. கடிகையில்,

ச௫. திருவின்னம்பர் சுவாமி அம்பாமூர்த்தீஸ்வரர் அம்மன்கொந்தார்பூங்குழலி. எழுத்தறிநாயகர் கணக்கப்பிள்ளைக்குட் கணக்கராக சிவபெருமானிருந்து வெள்ளேட்டை வைத்து கோயிற் கணக்கொன்றுங் குறைவுறுமல் அரசனிடங் கணக்

கோப்பிவித்த தலம். அப்பர் சுவாமிகள் பதிகத்தில் காண்க. ஐராவததீர்த்தம், திருஞானபதிகம் க. திருநாவுபதிகம் ச. ஆக ரு. அதற்கு வடக்கு க. கடிகையில்,

சசு. திருப்புறம்பியம், சுவாமி சாக்ஷிநாதேசுரர், அம்மன் சொல்லனாயகி, பிரமதீர்த்தம், புன்னைவிருக்ஷம், இத்தலத்தில் பிரளயங்காத்த பிள்ளையார் ஆவணி மீ விநாயக சதுர்த்தியில் (கூச) சேர், தேன்படிவட்டங் கொண்டொற்றிக்கொடுக்க அவ்வளவும் விநாயக மூர்த்தத்திற் சுவறிவிடுகிறது. வன்னி விருக்ஷம், வணிகப்பெண்ணுக்குச் சாக்ஷி சொன்ன தலம், திருஞான பதிகம் க. திருநாவுபதிகம் க. சுந்தரபதிகம் க. ஆக ந. அதற்கு வடமேற்கு ந. கடிகையில்,

சஎ. திருவிசையமங்கை, சுவாமி விசையநாதேசுரர், அம்மன் மங்கைநாயகி, அருச்சுன தீர்த்தம், திருஞானபதிகம் க. திருநாவுபதிகம் க. ஆக உ. அதற்கு வடமேற்கு முக்காற் கடிகையில்,

சஅ. திருவைகாவூர் எ-து வில்வவனம், சுவாமி வில்வவனேசுரர், அம்மன் பூவைவல்லி, கூற்றுவ தீர்த்தம். திருஞானபதிகம் க. அதற்குந் தென்மேற்கு சுா. கடிகையில்.

சக. திருவடகுரங்காடுதுறை, சுவாமி குலைவணங்கிநாதர், அம்மன் அழகுசடைநாயகி, தீர்த்தம் காவேரி, திருஞானபதிகம் க, அதற்கு மேற்கு ௬௦. கடிகையில்.

ருO. திருப்பழனம், சுவாமி ஆபத்தசகாய நாத

ரர், அம்மன் பெரியநாயகி, மங்களதீர்த்தம். இதற்குத் திருப்பதிக்கோவையி லுள்ள தொகை பதிகம் ரு. க்கு திருஞானபதிகம் க. திருநாவு பதிகம் ரு. ஆக சு. கூட இருக்கிற ஒருபதிகம மதிக்கப்படவில்லை. அதற்கு மேற்கு கஉ. கடிகையில்.

ருக. திருவையாறு சுவாமி செம்பொற்சோதிநாதர் அம்மன் அறம்வளர்த்தநாயகி நந்திகேசுரர் பூசித்தது பஞ்சணதீர்த்தம். தென்பிரகாரத்தில் சூரியதீர்த்தம். ஆடியமாவாசையில் அப்பர் சுவாமிகளுக்கங்குள்ள சராசரமெல்லாஞ் சிவமுஞ் சத்தியுமாக சகலமுந் தோன்றச்செய்து திருவருளாற் கைலாயதரிசனமுங் கொடுத்ததலம். சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்காகக் காவேரியின் பிரவாகத்தை யொதுக்கித் திருக்கூட்டத்துடனழைத்துத் தரிசனங்கொடுத்த தலம். நந்திகேசுரருக்குத் திருமழபாடியில் திருக்கலியாணம் சித்திரை மீ விசாகத்தில் சத்தஸ்தானம். திருஞான பதிகம் ரு. திருநாவு பதிகம் யஉ. சுந்தர பதிகம் க. ஆக யஅ. அதற்கு மேற்கு முக்காற் கடிகையில்,

ருஉ. திருநெய்த்தானம் எ-து தில்லைஸ்தானம், சுவாமி நெய்யாடியப்பார் அம்மன் வாலாம்பிகை, தீர்த்தம் காவேரி, திருஞானபதிகம் க. திருநாவுபதிகம் ரு. ஆக சு. அதற்கு மேற்கு க. கடிகையில்,

ருரு. திருப்பெரும்புலியூர், சுவாமி வியாக்கிரமபுரியீசுரர், அம்மன் சௌந்தர நாயகி, தீர்த்தம் காவேரி. திருஞானபதிகம் க. அதற்கு வடமேற்கு உ. கடிகையில்,

ருச. திருமழபாடி, சுவாமி வச்சிரதம்பேசுரர் அம்மன் அழகாம்பிகை, தீர்த்தங்கள் சிவகங்கை இலக்குமி தீர்த்தம் உ. ம் சிலகாலத்துக்குமுன் கொள்ளிடத்தின் முழுகிப்போய்விட்டன, அதுமுதற் கொள்ளிடமே தீர்த்தமாயிருக்கின்றது. தீர்த்தங்களிருந்தவை அப்புராணத்தாற் றெரிகின்றது. திருஞானபதிகம் ரு, திருநாவு பதிகம் உ. சுந்தர பதிகம் க. ஆக கூ. அதற்கு வடக்கு எற. கடிகையில்.

ருரு. திருப்பழுவூர் எ-து கீழ்ப்பழுவூர், சுவாமி வடமூலநாதர், அம்மன் அருந்தவநாயகி. இது அட்டவீரட்டத்திலொன்று. இதுவும் யானையை சம்மாரஞ்செய்தவிடம். பிரமதீர்த்தம் இதற்கு தென்றனைக் கடிகையிலுள்ள மேலைப்பழுவூரி லிருக்கின்ற மீனாக்ஷியம்மன் சுந்தரேசுரராலயஞ் சிலகாலத்துக்குமுந்திப் பிரதிட்டை செய்திருப்பதால் மேற்சொல்லிய கீழ்ப்பழுவூரே ஆதிக்ஷேத்திரம். திருஞான பதிகம் க. அதற்குத்தென்மேற்கு எ. கடிகையில்,

ருகூ. திருக்கானூர், சுவாமி செம்மேனியப்பர் அம்மன் சிவயோகநாயகி, வேததீர்த்தம். திருஞானபதிகம் க. திருநாவு பதிகம் க. ஆக உ. அதற்கு வடமேற்கு ச. கடிகையில்,

ருஎ. திருப்பேரன்பிலாலந்துறை. எ-து திருவன் பிலாலந்துறை, சுவாமி சத்திவாகீசுரர், அம்மன் சௌந்தரியநாயகி, காயத்திரி தீர்த்தம். திருஞான பதிகம் க. திருநாவு பதிகம் க. ஆக உ. அதற்கு வடமேற்கு ரு. கடிகையில்,

௫அ. திருமாந்துறை. சுவாமி அம்பரவருணேசுரர், அம்மன் அழகிலுயர்நாயகி. காயத்திரி தீர்த்தம், திருஞான பதிகம் க. அதற்குத் தென்மேற்கு ௩. கடிகையில்,

௫௯. திருப்பாற்றுறை. சுவாமி திருமூலநாதநாசுரர், அம்மன் மோகாம்பிகை, தீர்த்தம் கொள்ளிடம். சிவபெருமான் பொன்னிறமாய்ப் புத்தி லெழுந்தருளி யிருந்ததலம். திருஞான பதிகம் க, அதற்குத் தென்மேற்கு ச. கடிகையில்,

௬0. திருவானைக்கா எ-து சம்புகேசுரம், சுவாமி சம்புகேசுரர், அம்மன் அகிலாண்டவல்லி, தீர்த்தம் காவேரி விருட்சம் சம்புநாவல் வெள்ளானை சிலந்திப்பூச்சி முதலிய பூசித்துப் பேறுற்றதலம் கோச்செங்கட் சோழன் கழுத்திலிருந்து காவேரியில் விழுந்துபோன முத்துமாலையை திருமஞ்சனக் குடத்திற் றிருவருளால் வரச்செய்து தரித்துக் கொண்ட தலம் சிவ பெருமான் திருக்கரத்தாற் றிருநீறள்ளிக் கூலியாட்களுக்களித்து மதிளெழுப்பியதலம் அது இப்போது நீறிட்டான் றிருமதிளென்றும் பேர்வழங்குகின்றது அப்புலிங்கம் இஃது பஞ்சபூதக்ஷேத்திரத்திலொன்று திருஞானபதிகம் ௩-திருநாவு பதிகம் ௩-சுந்தர பதிகம் க-ஆக ௭, அதற்குவடமேற்கு அ-கடிகையில்.

௬க திருப்பஞ்ஞீலி எ-து லாலி கெடி சுவாமி நீலகண்டேசுரர் அம்மன் விசாலாக்ஷி யம்மை தீர்த்தம்விசாலாக்ஷி அதற்குதெற்கு ௨. கடிகையில் தடாகமுந் தோட்டமு முண்டு அதிற் சிவபெருமான்பிராமணரூபமாயெழுந்தருளி அப்பர்சுவாமிகளுக்குக் கட்டமுது கொடுத்து அழைத்துக் கொண்டு

வந்து முதலாவது பிரகாரத்தில் விட்டுமறைந்தனர் அதினாற்சோமிடு மீசனொன்று பதிகங்கட்டளை யிட்டிருக்கின்றனர் தீர்த்தம் எ-இருக்கின்றது திருஞான பதிகம் க-திருநாவு பதிகம் க-சுநதர பதிகம் க-ஆக-ங அதற்குத்தென்கிழக்கு ங- கடிகையில்.

சுஉ. திருப்பாச்சிலாச்சிராமம் எ-து திருவாசிசுவாமி மாற்றுவரதீசுரர் அம்மன் வாலசௌந்தரி பிரமதீர்த்தம் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் மழவராயன் பெண்ணுக்கு முயலகன் வியாதியைத் தீர்த்ததலம் ஷை சுவாமிகள் பதிகம் பாடியபடியால முயலகனுக்கு மோக்ஷம் அதனாற்சபாபதி மூர்த்தம் சர்ப்பத்தின்மே னடனமும்சடையிற்கிரீடமுமுடையதாயிருக்கின்றது சுநதரமூர்த்தி சுவாகள் அ-காப்புப் பாட து பொன் செய்பாய்க் கொடுக்க மறுபடி ச- காப்புப் பாடினவுடனே சிவபெருமான்றிரு வருளால் விஷ்ணுவைக்கொண்டு அச்செம்புகாசுமுழுது முரைத்து பொன்னாகக்காண்பிக்கப் பெற்றனந்த மூற்ற தலம் தீர்த்தம் அன்னமாம்பொய்கை வன்னிவிருட்சம் திருஞானபதிகம் க-சுந்தரபதிகம் க-ஆக உ-அதற்கு மேற்கு ௰ கடிகையில்.

சுங. திருவீயங்கோய்மலை சுவாமி ம்ரகதசலஈசுரர் அம்மன் மரகதவல்லி அமுர்ததீர்த்தம் இப்போது திருவிங்காதமலையெனவழங்குகின்றது ஈபூசித்ததலம் திருஞான பதிகம்க- ஆக காவேரியின் வடகரையில் சிவஸ்தலம் சு௰ங-ம்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

காவேரியின் றென்பால் ஷை திருவீய்ங்கோய்மலைக்குத் தெற்கு எ. கடிகையில்,

சூச. திருவாட்போக்கி எ-து இரத்தினகிரிமலை, சுவாமி இரத்தினகிரீசுரர், அம்மன் சுரும்பார்குழலி, கௌரிதீர்த்தம். திருநாவு பதிகம் க. அதற்கு வடகிழக்கு ௭. கடிகையில்,

சூரு. திருக்கடம்பந்துறை, சுவாமி கடம்பவனத்தீசுரர், அம்மன் முற்றிலாமுலையாள், வடக்குப்பார்த்த சந்நிதி, ஞானதீர்த்தம், கடம்ப விருக்ஷம், காலைக்கடம்பர் மத்தியானச்சொக்கர் மாலைத்திருவிங்கநாதர். திருநாவு பதிகம் க. அதற்குக்கிழக்கு எ௭. கடிகையில்,

சூசூ. திருப்பராய்த்துறை, எ-து அகண்ட காவேரி சுவாமி பராய்த்துறைநாதர், அம்மன் பொன்மயிலாம்பிகை, தீர்த்தம் காவேரி, திருஞானபதிகம் க. திருநாவுபதிகம் க- ஆக உ. அதற்குத் தென்கிழக்கு எ. கடிகையில்,

சூஎ. திருக்கற்குடி எ-து உய்யக்கொண்டான் பெருமலை, சுவாமி உச்சிநாதேசுரர், அம்மன் அஞ்சனாட்சி, திருஞான பதிகம் க. திருநாவு பதிகம் க. சுந்தர பதிகம் க. ஆக ௩. அதற்கு வடகிழக்கு ௩. கடிகையில்,

சூஅ. திருமூக்கிச்சரம் எ-து உறையூர் சுவாமி பஞ்சவருணேசுரர் அம்மன் காந்திமதியம்மை பஞ்சவருணதீர்த்தம் புகழ்ச்சோழநாயனார் கோச்செங்கட் சோழநாயனார் முத்திஸ்தலம் திருஞானபதிகம் க- அதற்கு வடகிழக்கு க- கடிகையில்.

௬௯. திருச்சிராப்பள்ளி சுவாமி தாயுமானேசுரர் அம்மன மட்டுவார்குழலி கைலாயத்துக்கொடுமுடி செவ்வந்திப் புட்பத்துக்காக சிவபெருமான்மேற்குமுகமான தலம், ஒருபக்திமாதாகிய பிராமணக் கருப்பினி வருத்தம்நோக்கிச் சிவபெருமான் தாய்போல வந்து மருத்துவம்பார்த்து மறைந்தமையால் தாயுமானவரென்று காரணப்பெயர் தீர்த்தம் காவேரி, நன்று தீர்த்தம் நியதில்லாதீர்த்தம். திருஞான பதிகம் க. திருநாவு பதிகம் க. ஆக உ. அதற்குக் கிழக்கு ங. கடிகையில்,

எ0. திருவெறும்பியூர் சுவாமி எறும்பீசுரர் அம்மன் நறுங்குழநாயகி, தீர்த்தம் பிப்பிலிகை, தேவதைகள் எறும்பாய்வந்து பூசித்த தலம். திருநாவு பதிகம் உ. அதற்குக் கிழக்கு ச- கடிகையில்.

எக. திருநெடுங்களம் சுவாமி நித்தியசுந்தரேசுரர், அம்மன் ஒப்பிலாநாயகி, சூரியதீர்த்தம், திருஞான பதிகம் க. அதற்கு வடகிழக்கு ச. கடிகையில்,

எஉ. திருக்காட்டுப்பள்ளி எ-து மேலைக்காட்டுப்பள்ளி சுவாமி தீயாடியப்பர், அம்மன் வார்கொண்ட முலையம்மை, சூரியதீர்த்தம். திருஞான பதிகம் க. திருநாவு பதிகம் க. ஆக உ. அதற்குக் கிழக்கு எ. கடிகையில்,

எங. திருவாலம்பொழில் சுவாமி ஆத்மநாதேசுரர், அம்மன் ஞானம்பிகை, தீர்த்தம் திருப்பாற்குளம். திருநாவு பதிகம் க. அதற்குக் கிழக்கு க. கடிகையில்,

எச. திருப்பூந்துருத்தி சுவாமி புட்பவனநாதர், அம்மன் அழகாலமைந்த வம்மை, தீர்த்தம் காசிக்கங்கை, திருநாவு பதிகம் ௩. அதற்குக் கிழக்கு க. கடிகையில்,

எ௫. திருகண்டியூர், சுவாமி வீரட்டானநாதர், அம்மன் மங்கலநாயகி, பிரமதேவனடுத்தலை கொய்த தலம் அத்தலை சந்திரசேகரராலயத்தி லிருக்கின்றது. தீர்த்தம் காவேரி. திருஞான பதிகம் க. திருநாவு பதிகம் க, ஆக உ. அதற்குக் கிழக்கு ௩. கடிகையில்,

எசு. திருச்சோற்றுத்துறை. சுவாமி தொலையாச்செல்வநாதர், அம்மன் ஒப்பிலாம்பிகை, சூரிய தீர்த்தம், திருஞான பதிகம் க. திருநாவு பதிகம் ச. சுந்தர பதிகம் க. ஆக சு. இன்னம் ஒரு பதிகம் மதிக்கப்படவில்லை, ஆகப் பதிகம் எ. அதற்குத் தென்மேற்கு க. கடிகையில்,

எஎ. திருவேதிக்குடி. சுவாமி வேதபுரீசுரர், அம்மன் மங்கையர்க்கரசி, சுந்தரதீர்த்தம், திருஞான பதிகம க. திருநாவு பதிகம் க. ஆக உ. அதற்குத் தென்கிழக்கு ௩. கடிகையில்,

எஅ. திருத்தென்குடி எ-து திட்டை. சுவாமி பசுபதீசுரர், அம்மன் உலகநாயகி: சக்கரதீர்த்தம். திருஞான பதிகம் க. அதற்கு வடமேற்கு ௩. கடிகையில்,

உஉரு. திருக்கோவலூர் எ-து கிழவூர் சுவாமி விரட்டேசுரர் அம்மன் சிவானந்தவல்லி, தீர்த்தம் பெண்ணைநதி, இஃது அட்டவீரட்டத்திலொன்று, அ ந்தகாசுரனை வதைசெய்த தலம். திருஞானபதிக ம் க. தி நாவுக்கரசு க. ஆக உ. அதற்கு வட கிழக்கு முக்காற் சடிகையில்,

உஉசா. திருவறையணிநல்லூர் எ-து அறைக ண்டநல்லூர். சுவாமி அறையணிநாயகர், அம்ம ன் அருள்நாயகியம்மை, பாண்டவதீர்த்தம் ஆற

ணியதீர்த்தம். திருஞான பதிகம் க. அதற்குத் தென்கிழக்கு எ. கடிகையில்.

உஉஎ. திருவிடையார் சுவாமி இடையாற்றீஸ்வரர், அம்மன் சிற்றிடைநாயகி, தீர்த்தம் சிற்றிடை. சுந்தரபதிகம க. அதற்குக் கிழக்கு உ. கடிகையில்,

உஉஅ. திருவெண்ணெய்நல்லூர் சுவாமி தடுத்தாட்கொண்டஈஸ்வரர், அம்மன் வேற்கண்ணம்மை. தீர்த்தம் பெண்ணைநதி. சுந்தரமூர்த்திசுவாமிகளைத் தடுத்தாட்கொண்டதலம், அவ்விடத்துச் சிவபெருமான் [illegible] இருக்கின்றார். சுந்தரபதிகம் க. அதற்கு வடகிழக்கு ய. கடிகையில்,

உஉகூ. திருத்துறையூர் எ-து திருத்தளூர். சுவாமி பசுபதீஸ்வரர் அம்மன் பூங்கோதைநாயகி, சுந்தரமூர்த்திசுவாமிகளுக்குத் [illegible] ந்தவிர [illegible] ஞ்செய்த [illegible] லோகநாயகியம்மை. சுந்தரபதிகம் க. அதற்கு வடகிழக்கு க. கடிகையில்,

உஙூ0. திருவடுகூர் எ-து ஆண்டார்கோயில். சுவாமி வடுகீஸ்வரர் அம்மன் வடுவகிர்கண்ணி. பஞ்சநதிகார் திரிபுரசுந்தரி. திருஞான பதிகம க. அதற்குத் தென்கிழக்கு ய. கடிகையில்,

உஙூக. திருமாணிக்குழி, சுவாமி மாணிக்கவரதேஸ்வரர் அம்மன் மாணிக்கவல்லி மாணிக்கதீர்த்தம். வாமனவதாரத்தில் விஷ்ணு பூசித்ததலம். இஃதன்றி அவ்விண்டுவுக்குச்சையோகஸ்தான

மென்று பிரசன்னபட மெப்போதும் போட்டதில் ஏழாவது ருத்திரா பீமருத்திரர் என்ற வுருவமெழுதி யிருக்கின்றது. அவர்காவலாக விருக்கின்றார். மேற்படிபிரசன்னபடத்துக்சேசோடச வுபசாரமும அருச்சனையுநடந்து அர்க்கியாராதனைசெய்யும்போது மேற்படி படத்தை நீக்கித் தரிசனஞ் செய்கிறது இன்னம் வணிகருக் குதவிசெய்ததினல் உதவிநாயக ரென்றும் அம்பலக்கண்ணியம்மைபென்றும் பெயர்கொண்ட சுவாமிகளுமுண்டு கொன்றைவிருக்ஷம் திருஞானபதிகம் க. அதற்கு வடகிழக்கு ௫. கடிகையில்,

உ௩உ. திருப்பாதிரிப்புலியூர் சுவாமி தோன்றுத்துணைநாதர் அம்மன் தோகாம்பிகை சிவபெருமானப்பர் சுவாமிகளைக் கடலினின்றுங் கரையேற்றி விட்டதலம் பாதிரிவிருக்ஷம் திருஞானபதிகம க. திருநாவுபதிகம் க. ஆக உ. அதற்குவடமேற்கு ௫. கடிகையில்,

உ௩௩. திருமுண்டீச்சுரம் எ - து திருக்கண்டீச்சரம் சுவாமி மூண்டீஸ்வரர் அம்மன் கானர்குழலி நடனபாதேஸ்வரர் அம்மன் அஸ்தகாளாம்பிகை முண்டகதீர்த்தம திருநாவுபதிகம் க. அதற்கு வடமேற்கு ௰௩. கடிகையில்,

உ௩௪. திருப்புறவார் பனங்காட்டூர் எ - து பனையபுரம் சுவாமி பனங்காட்டீஸ்வரர் அம்மன் திருப்புறவாம்பாள் பதுமதீர்த்தம் சிபிச்சக்கிரவத்திக்குத் தரிசனந்தந்ததலம். தாலவிருக்ஷம். திருஞானபதிகம் க. அதற்கு மேற்கு ச. கடியைில்.

உ௩௫. திருவாமாத்தூர் சுவாமி காமார்த்தேஸ்வரர் அமமன் அழகியநாயகி பதும திர்த்தம்.

கோட்டமகாரிஷியும் பசுவும் பூசையாற்றிய தலம். வன்னிவிருக்ஷம். திருஞானபதிகம் ௨. திருநாவுபதிகம் ௨. சுந்தர பதிகம் ௧. ஆக ௫. அதற்கு வடமேற்கு ௯0. கடிகையில்,

௨௯௬. திருவண்ணாமலை, சுவாமி அருணாசலேசுவரர், அம்மன் உண்ணாமுலையாள், தீர்த்தம் சிவகங்கை, பிரமதீர்த்தம் திக்குப்பாலகர் தீர்த்தங்கண்முதலிய வனேக திவ்விய தீர்த்தங்கள் சிவபெருமான் வல்லாள ராசனுக்குப் புத்திரனாகத்தோன்றி யுத்தரகிரியையுஞ் செய்தனர். இரண்டாம்பிரகார மேற்புறத்தில் விஷ்ணு புள்ளாங்குழல் வாயில்வைத் தூதிக்கொண்டிருக்கின்றார். இவ்வாறேதிருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் பதிகத்திலுங்கட்டளையிட் டிருக்கின்றது. பிரம விஷ்ணுக்களுடைய மமகாரநிர வாகஞாபித்த பிரகாரம் விஷ்ணுவானவர் வராகவதாரமாய் திருவடியைத் தேடிக்காணாத யாவும் பிரமதேவன் அன்னரூபமாய் திருமுடியைத் தேடி மொழிமாறித் துக்கத்தையடையவுஞ் சிவபெருமான் அக்கினிமலையா யெழுந்ததலம். அம்மலை கிரேதாயுகத்தில் அக்கினிமலையாயும் திரேதாயுகத்தில் சுவர்ணமலையாயும் துவாபர யுகத்தில் தாம்பிரமலையாயும் கலியுகத்திற் கன்மலையாயு மிருக்கின்றது. அத்தல நினைக்க முத்திஸ்தலம். கார்த்திகை மீ கார்த்திகை நட்சத்திரத்தில் சிவபெருமான் சுடரொளித்தீப தரிசனம் திருஞானபதிகம் ௨. திருநாவுபதிகம் ௩. ஆக ௫. ஆக நடுநாடு ௨௨. ம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாடு, காமகோடி பீடமாகிய

௨௩௭. திருக்கச்சி யேகம்பமென்பது காஞ்சிபுரம், சுவாமி ஏகாம்பரநாதர் அம்மன் காமாட்சியம்மை தழுவக் குழைந்தவர் அத்தலத்தி லிரண்டாம் பிரகாரந் தென்பாலில் பிரமனாற் பூசிக்கப்பட்டவர் வெள்ளக்கம்பனென்றும் வடபுறத்தில் விண்டுவாற் பூசிக்கப்பட்டவர் கள்ளக்கம்பனெனவும் பெயர்பெற்றிரண்டு சிவலிங்கப்பெருமானு மெழுந்தருளியிருக்கின்றனர். மேற்படி ஆதிசன்பேட்டையில் திருக்குறிப்புத்தொண்டநாயனார் ஆலயம், அந்தவாலயத்தில ஐந்தாம் பிரகாரத் தென்னண்டையிற் [illegible]தலம். தீர்த்தம் சிவகங்கை, கம்பாநதி [illegible] முதலிய வனந்த புண்ணிய தீர்த்தங்களுள. விருட்சம் மாமரம். திருஞானசம்பந்தர் பதிகம் ௪. திருநாவுக்கரசர் பதிகம் ௭. சுந்தரர் பதிகம் க. ஆக ௰௨. அதற்குத் தென்மேற்கு க. கடிகையில்.

௨௩௮. திருமேற்றளி எ-து கச்சிமேற்றளி சுவாமி திருமேற்றளிநாதர் அம்மன் காமாக்ஷியம்மை. திருநாவுக்கரசர் பதிகம் க. சுந்தரர் பதிகம் க. ஆக உ. அதற்கு வடக்கு க. கடிகையில்,

௨௩௯. திருவோண காந்தன்றளி சுவாமி ஓணகாந்தீஸ்வரர். அம்மன் காமாக்ஷியம்மை. சுந்தரமூர்த்தி சுவாமிகட்குப் பொற்காசளித்ததலம். ஓணனென்றுங் காந்தனென்றும் பெயரையுடைய விரண்டசுரராற் பூசித்ததலம், ஓணகாந்ததீர்த்தம். சுந்தரபதிகம் க. அதற்குத்தெற்கு ௨. கடிகையில்,

௨௪0. திருவனேக தங்காவதம் எ-து கச்சியனேகதங்காவதம். சுவாமி திருவனேகதங்காவ

தேஸவரர், அம்மன் காமாக்ஷியம்மை, தாறுதிர்த்தம். சுந்தர பதிகம் க. அதற்குக் கிழக்கு உ. கடிகையில்,

உசக. திருக்கச்சி நெறிக்காரைக்காடு ஏ-து திருக்காலிக்கோரி கோயில். [illegible] காரைத்திருநாதேஸ்வரர். அம்மன் காமாட்சியம்மை. [illegible] [illegible] பட்டாபியம்மை. [illegible] [illegible]. [illegible] [illegible]. [illegible] பதிகம் க. [illegible] [illegible],

உசஉ. திருப்[illegible]. [illegible] [illegible]. அம்மன் [illegible]. [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]. [illegible] [illegible]. அதற்குத் [illegible] [illegible].

உசங. திருமாரக் [illegible] [illegible] சாத்த வரதேஸ்வரர். அம்மன் [illegible] [illegible] ர்த்தம் புத்திரவேளியின்[illegible] [illegible] [illegible]மான தலம், உடுப்பு [illegible] [illegible], திருஞானபதிகம் க. அதற்கு[illegible] மேற்கு யிரு. கடிகையில்,

உசச, திருவோத்தூர் சுவாமி வேதநாதேஸவரர். அம்மன் இளமுலைநாயகி, திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் ஆண்பனையைப் பெண்பனையாக்கியதலம் திருஞானபதிகம் க - அதற்குவடக்கு அ - கடிகையில.

உசரு. திருப்பனங்காட்டூர் ஏ-து வன்பார்த்

தான் பனங்காட்டூர் சுவாமி பனங்காட்டீஸ்வரர் அம்மன் அமுதவல்லியம்மை பனம்பழம் சிவபெருமானுக்கு நிவேதனமாகுந்தலம் சந்நிதியில் சமன்நிலையாக இரண்டு பனை விருக்ஷங்களிருக்கின்றன சம்பந்ததீர்த்தம் அப்பர்தீர்த்தம் சுந்தரதீர்த்தம் அதற்குத் தெற்கு ஒரு கடிகையில் வன்பார்க்கம் சுவாமி இராமசாமீசுரர் அம்மன் பஞ்சின் மெல்லடியம்மை அம்மார்க்கத்திற் சுந்தரமூர்த்தி சுவாமிகள் எழுந்தருளிவந்தபோது சிவபெருமான் பிராமண வேடம்பூண்டுவந்து கொடுத்த கட்டமுதைப் புசித்தவுடன் பிராமணரைநோக்கி எவ்வூரென்றுகேட்க வன்பார்க்கத்துக்கும் பனங்காட்டூருக்குமாக இருப்போமென்றுசொல்லி மறைந்தருளினர் உடனேயிதுவுஞ் சிவபெருமானுடலெனத் தேர்ந்து திருப்பதிகம்பாடியருளினர் இவ்விருதலத்திற்கும் சுந்தர பதிகம் க - அதற்கு வடமேற்கு உ௰ - கடிகையில்.

உசசு. திருவல்லம் சுவாமி வல்லநாயகேஸ்வரர் அம்மன் வல்லாம்பிகை தீர்த்தம் திருவல்லம் வாலாம் பேட்டை மலையில் கஞ்சார ராக்ஷதனென்றொரு அசுரனைச் சங்காரஞ்செய்ததாகப் புராணமிருக்கிறது மேற்படிதலத்தில் நந்திகேஸ்வரர் கிழக்கு முகமாக விருக்கின்றார் திருஞானபதிகம் க - அதற்குக் கிழக்கு ௰சு - கடிகையில.

உசஎ. திருமாற்பேறு சுவாமி மால்வணங்கேஸ்வரர் அம்மன் கருணாநாயகி விஷ்ணு பேறுபெற்றதலம் அரிதீர்த்தம் திருஞானபதிகம் உ - திருநாவுபதிகம் ச - ஆக சு - அதற்கு வடகிழக்கு ரு- கடிகையில்.

உசஅ. திருவூறல் எ - து தக்கோலம் சுவாமி உமாபதீஸ்வரர் அம்மன் உமாதேவி சேலநாதவீ

ஸ்வரர் சரிசரகண்ணியம்மை யெனவழங்குகிறது தீர்த்தம் ஊறல் இதற்குவடக்கிற் சமீபத்தில் கங்காதரவீஸ்வரர் மோகனவல்லியெனப் பெயர்வாய்ந்த சுவாமியம்மையுடைய வோராலயமிருக்கின்றது அவ்வாலயத்தி னந்தியின்வாயினின்று கங்கையுதையமாகி அச்சிவபிரானை வலமாகப் பிரதக்கணஞ்செய்துகொண்டு மேற்படி உமாபதீஸ்வரர் துஜஸ்தம்பத்திடமான நந்தி யருகில்வந்து குளத்திற்றேங்கி கால்வாய்வழியாய்க் கழனிகளிற்செல்லுகின்றது திருஞானபதிகம் க - அதற்குத் தென்கிழக்கு ரு கடிகையில்.

உசகூ. திருவிலம்பியங்கோட்டூர் சுவாமி சந்திரசேகரேஸ்வரர் அம்மன் கோடெந்துமாமுலையாள் தேவநாயகர் கதிர்முலையம்மை யெனவுமிக்காலத்தில் வழங்குகின்றது அரம்பையர் பூசித்ததலம் இந்துதீர்த்தம் திருஞானபதிகம் க - அதற்குவடகிழக்கு கஉ - கடிகையில்.

உருய, திருவிற்கோலம் எ-து கூவம் சுவாமி புராந்தகவீஸ்வரர் அம்மன் புராந்தகநாயகி தீர்த்தம் விற்கோலம் இத்தலத்தின் வடக்கொருகடிகையில் விருத்தவீரநதி உத்தரவாகி தியாகவந்தவிடத்தி லொருதிடரில் உத்தேசமரைக்காணிநிலமளவாயிருக்கின்றது அதிலூற்றுண்டாக்கி நான்குகாலத்துக்கும் திருமஞ்சனங்கொடுவந்து புனிதத்துடன் சிவலிங்கப்பெருமானுக்கு அபிடேகஞ்செய்கின்றனர் தீண்டாத்திருமேனி கூபாக்கினி தீர்த்தம் திருஞானபதிகம க - அதற்குவடமேற்கு அ - கடிகையில்.

உருக. திருவாலங்காடு சுவாமி அமுததாண்டேஸ்வரர் அம்மன் வண்டார்குழலி காரைக்கால

ம்மை தலையானடந்து பங்குனிமீ சோதியிற்சிவபெருமான் ருயெனவழைக்கப் பேயென்று சொல்லிக்கொண்டு திருவடியடைந்ததலம் இரத்னசபை பலாவிருக்ஷம் ஞானதீர்த்தம் திருஞானபதிகம் க- திருநாவுபதிகம் உ சுந்தரபதிகம் க- ஆக. ச- அதற்குக் கிழக்கு ரு- கடிகையில்.

௨௫௨. திருப்பாசூர் சுவாமி பாசூரநாதர் அம்மன் பசுபதிநாயகி இக்காலத்து வாசீசேஸ்வர சுயம்புவனியம்மையென வழங்குகின்றது மூங்கிலடியிற் சிவபெருமானுதித்ததலம் சோழனுக்கொரு காரணார்த்தமாக பாம்பாட்டியாகத் திருவுருக்கொண்டாடல்காட்டியதலம் திருஞானபதிகம் க- திருநாவுபதிகம் உ- ஆக. ௩ அதற்கு வடக்கு ௩- கடிகையில்.

௨௫௩. திருவெண்பாக்கம் எ-து இவரம்பூர் சுவாமி வெண்பாக்கநாதர் அம்மன் கனிவாய்மொழியம்மை ஊன்றீஸ்வரர் பின்னவொலித்தாயென்று வழங்குகிறது கைலாயதீர்த்தம் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குக் கோல் கொடுத்ததலம் இதற்குத் தெற்கு ௭- கடிகையில் வெண்பாக்கமென்கிறதில் கைகாட்டியநாதர் பரமேஸ்வரியம்மை யெழுந்தருளியிருக்கின்ற வேராலய மிருக்கின்றது சுந்தரபதிகம் க- அதற்கு வடகிழக்கு ௰ கடிகையில்.

௨௫௪. திருக்கள்ளில் எ-து திருக்கள்ளம் சுவாமி சிவானந்தநாதர் அம்மன் ஆனந்தவல்லியம்மை தீர்த்தம் ஆனந்தம் திருஞானபதிகம் க- அதற்கு வடமேற்கு ௪௰- கடிகையில்.

௨௫௫. திருக்காளத்தி சுவாமி காளத்திநாதர் அம்மன் ஞானப்பூங்கோதை பாம்பு யானை சில

ந்தி கண்ணப்பர்சுவாமிகள் நக்கீரர் சிவகோசரியார் முதலியோர் முத்தியுற்றதலம் திருஞானபதிகம் உ. திருநாவுபதிகம் க - சுந்தரபதிகம் க - ஆக. ச - அதற்குத் தென்கிழக்கு ௫௰ கடிகையில்.

உ௫சு. திருவொற்றியூர் சுவாமி மாணிக்கத்தியாகர் அம்மன்வடிவுடைஅம்மை ஆதிபுரீசுரர்திரிபுரசுந்தரியம்மை எனவும்வழங்குகின்றது சுந்தரமூர்த்திசுவாமிகளுக்கு சங்கிலிநாச்சியாரை சிவபெருமான் திருமணஞ்செய்வித்ததலம் கலிநீதிநாயனர் வழிபாடாற்றி முத்தியுற்றதலம் அத்தலத்தின்கண் பட்டணத்து பிள்ளையார் திவ்வியசமாதியுமிருக்கின்றது பிரமன்பூசித்ததலம் பிரமதீர்த்தம் மகிள்விருக்ஷம் திருஞானபதிகம் க - திருநாவுபதிகம் ௫ - சுந்தரபதிகம் உ ஆக. அ - அதற்குத்தென்மேற்கு எ- கடிகையில்.

உ௫எ. திருவலிதாயம் எ-து பாடி, சுவாமி வலிதாயநாதர். அம்மன் தாயம்மை, தீர்த்தம் வலிதாயம். திருஞான பதிகம் க. அதற்கு வடமேற்கு ௫. கடிகையில்,

உ௫அ. திருவடமுல்லைவாயில். சுவாமி மாசிலாமணியீஸ்வரர், அம்மன் கொடியிடைநாயகி, தீர்த்தம் பாலாறு. சுப்பிரமணியர் பூசித்ததலம், சுப்பிரமணிய தீர்த்தம். ஆதொண்டைச் சக்கரவர்த்தி வெட்டுத்தாழகிச் சிவலிங்கப்பெருமானர் வெளிப்பட்ட தலம். சுந்தர பதிகம் க. அதற்குத் தென்மேற்கு ௩. கடிகையில்,

உ௫௯. திருவேற்காடு சுவாமி வேற்காட்டீஸ்வரர் அம்மன் வேற்கண்ணியம்மை வேற்கண்ணி

திர்த்தம் திருஞான பதிகம் க. அதற்குத் தென் கிழக்கு ய. கடிகையில்,

உகூ0. திருமயிலாப்பூர். சுவாமி கபாலீஸ்வரர் அம்மன் கற்பகவல்லி கபாலீச்சுரம் கபாலிதீர்த்தம் மணிகர்ணிகை விருக்ஷம் புன்னைகம். திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் என்பைப் பூம் பாவையென்னு நாமத்தையுடைய வொருபெண்ணாகும்படி பாடியருளிய தலம். பார்வதியார் மயிலாய்ப் பூசித்ததலம். திருஞான பதிகம் க. அதற்குத் தென்கிழக்கு ங. கடிகையில்,

உகூக. திருவான்மியூர். சுவாமி மருந்தீஸ்வரர் அம்மன் சொக்கநாயகியம்மை வான்மீகரிஷிக்குச் சிவபெருமான் நடனதரிசனங் காட்டியதலம். திருஞான பதிகம் உ. திருநாவு பதிகம் க. ஆக ங. அதற்குத் தென்மேற்கு யஅ. கடிகையில்,

உகூஉ. திருக்கச்சூராலக்கோயில் சுவாமி விருந்திட்ட ஈஸ்வரர் அம்மன் அஞ்சனாக்ஷி சிவபெருமான் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு அமுது கொடுத்த தலம விருந்துதீர்த்தம் சுந்தரபதிகம் க. அதற்குத் தென்கிழக்கு ரு. கடிகையில,

உகூங. திருஇடைச்சுரம் சுவாமி இடைச்சுரநாதர் அம்மன் மடக்கொடிநாயகி இஃது ஞானபுரீஸ்வரர் கோவர்த்தனம்பாள் என்றும் வளங்குகின்றது மதுரதீர்த்தம் நான்கு திக்கும் பருப்பதங்கள் நந்திமலை கிர்த்திகை தீபம் திருஞான பதிகம் க. அதற்குத்தெற்கு ரு. கடிகையில்.

உகூச. திருக்கழுக்குன்றம் சுவாமி வேதகிரீஸ்வரர் அம்மன்பெண்ணினல்லாளம்மை பக்ஷிதீர்த்தம் நந்தீஸ்வரதீர்த்தம் கழுக்கள் பூசிக்கும் தலம்

திருஞான பதிகம் க. திருநாவுபதிகம் க. சுந்தரபதிகம் க. ஆக ௩. அதற்குத் தென்மேற்கு உம. கடிகையில்.

உசுரு. திருஅச்சிறுபாக்கம் சுவாமி பாக்கபுரேஸ்வரர் ஆடகேசுவரர் அம்மன் சுந்தரமின்னமைமை மரகதவல்லியம்மை திரிபுரதகனத்துக்குச் சிவபெருமான் ரதமேறியபோது அச்சில், விநாயகரதருளா லச்சுக்கூடியதலம் விருக்ஷம் கொன்றை சங்குதீர்த்தம் திருஞான பதிகம் க. அதற்கு ததென்மேற்கு உ0. கடிகையில்.

உசுசு. திருவக்கரை சுவாமி சந்திரசேகரஈஸ்வரர் அம்மன் வடிவாம்பிகை அன்றி அமுதாம்பிகை வக்கிராசுரன் பூசித்ததலம் சந்திரதீர்த்தம் பிரமதீர்த்தம் திருஞான பதிகம் க. அதற்குக்கிழக்கு சு. கடிகையில.

உசுஎ. திருஅரிசிலி எ-து ஒழுந்தியாப்பட்டு சுவாமி அரிசிலிநாதர் அம்மன் பெரியநாயகி தீர்த்தம் அரிசிலி திருஞான பதிகம் க. அதற்குத் தென்கிழக்கு உ. கடிகையில்.

உசுஅ. திருவிரும்பை மாகாளம் சுவாமி மாகாளேஸ்வரர் அம்மன் குயின்மொழிநாயகி மதுசுந்தரநாயகியென வழங்குகின்றது திருஞானபதிகம் க. ஆகத் தொண்டைநாட்டிலுள்ள திருப்பதியாகிய சிவதலங்கள ௩உ. ம், முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

துளுவநாடு.

உசுக. திருக்கோகரணம் சுவாமிமகாபலநாதர் அம்மன் கோகரணநாயகி கோகரண தீர்த்தம இ

ராவணேஸ்ரன் கைலாயத்திருந்து சிவபிரானனுக்கிரகத்தாற் கொண்டுவந்த சிவலிங்கப்பெருமானை வழியினின்று தந்திரத்தாற் கணபதி வாங்கிப் பிரதிட்டை செய்ததலம். திருஞான பதிகம் க. திருநாவு பதிகம் க. ஆக உ. முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

வடக்குத் திருச் சிவஸ்தலம்.

உஎ0. திருப்பருப்பதம் சுவாமி பருப்பதநாதர் அம்மன் பருப்பதநாயகி தீர்த்தம் பாலாழி இதுவே மல்லிகார்ச்சுனபர்வதம் நந்திகேசுரர் பூசித்தமலை திருஞானபதிகம் க. திருநாவுபதிகம் க. சுந்தரபதிகம் க. ஆக ந.

உஎக. திருவிந்திர நீலப்பருப்பதம் சுவாமி நீலாசலநாயகேஸ்வரர் அம்மன் நீலாம்பிகை தீர்த்தம் நீலாம்பிகை திருஞான பதிகம் க.

உஎஉ. திருவனேக தங்காவதம் சுவாமி அருண்மன்னேஸ்வரர் அம்மன் மனோன்மணி ஞான தீர்த்தம் திருஞான பதிகம் க.

உஎந. திருக்கேதாரம் சுவாமி கேதாரநாதேஸ்வரர் அம்மன் கேதாரகௌரியம்மை மந்தாகினி தீர்த்தம் ஆறுமாதந் தேவதைகளும் ஆறுமாதம் மனுடரும் பூசித்துவருந் தலம் திருஞானபதிகம் க. சுந்தர பதிகம் க. ஆக உ.

உஎச. திருகொடித்தான்மலை எ-து ஸ்ரீகைலாயம் சுவாமி பரமசிவம் அம்மன் பார்வதிதேவி அதுவே வெள்ளியங்கிரி தீர்த்தம் சாவணப்பொய்கை திருஞான பதிகம் உ. திருநாவு பதிகம் ச. சுந்தர பதிகம் க. ஆக எ. ஆக வடபதி டு-ம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

ஆகத்திருச்சிவஸ்தலம்(உஎச)க்கும் உள்ள திருப்பதிகம் (எசகூ)ம் திருஞான பொதுப்பதிகம் எ. ம். திருநாவு பொதுப்பதிகம் ௬எ.ம் சுந்தர பொதுப்பதிகம் ச.ம் ஆக (எகூஎ)ம் முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

தேவாரம்

கற்றுக்கொள்வன வாயுளநாவுள
விட்டுக்கொள்வன பூவுளநீருள
கற்றைச்செஞ்சடை யானுளநாமுளோ
மெற்றுக்கோநமனார் முனிவுண்பதே.

அட்டவீரட்டத்தலம் அ-க்கும் விபரம்.

கட்டளைக் கலித்துறை.

பூமன்சிரங்கண்டியந்தகன்கோவல்புரமதிகை
மாமன்பறியல்சலந்தரன்விற்குடிமாவழுவூர்
காமன்கொறுக்கையமன்கடவூரிந்தக்காசினியிற்
றேமன்னுகொன்றையுந்திங்களுஞ்சூடிதன்சேவகமே;

அறுபத்துமூன்றுநாயன்மார்களுதயம்.

சித்திரையிலைவர் வைகாசியினிலைவர்
திகளானிதனிலைவ ராடியினிலைவர்
பொத்தியசிராவணியி லறுவர்புரட்டாசிபுகழ்
கால்வரைப்பசியி லறுவர்கார்த்திகையில்
வித்தாரமோரைவர் மார்கழியோரைவர்
விளங்கியதைமதியெழுவர் மாசிதனிலைவர்
வைத்ததிறற் பங்குனியிலைவரீராறு
மாதத்திலறுபதின் மூவருதித்தனரே,

சமயாசாரியர்கள் நால்வரும்முத்திபெற்றஷேத்திரம்

சித்திரைசதையமப்பர் சிறந்தவைகாசிமூலம்
அத்தரைப்பணிசம்பந்தர் ஆனிமாமகத்திலந்த
முத்தமிழ்வாதவூரர்முதியநல்லாடிதன்னில்
சுத்தமாஞ்சுவாதிநாளிற் சுந்தரர்கயிலைபுக்கார்.

சிவனடியேசிந்திக்குந்திருப்பெருகுஞ்சிவஞானம்
பவமதனையறமாற்றும்பாங்கினிலோங்கியஞான (ங்
மூவகையிலாக்கலைஞானமுணர்வரியமெய்ஞ்ஞான
தவமுதல்வர்சம்பந்தர்தாமுணர்ந்தாரந்நிலையில்.

வேதநெறிதழைத்தோங்க மிகுசைவத்துறைவிள
ங்கப், பூதபரம்பரைபொலியப்புனிதவாய்மலர்ந்த
ழுத, சீதவளவயற்புகலித் திருஞானசம்பந்தர்
பாதமலர்த்தலைக்கொண்டுதிருத்தொண்டுபரவுவா
ம்.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

இங்ஙனங்கூறிய தலங்களையன்றித்

தரிசித்த தலங்களாவன

ருல. வ-து· திருப்பழனத்துக்கு வடகிழக்கு
க௱. கடிகையில் சோமீச்சரம் சுவாமி சோமசுந்த
ரேசுரர் அம்மன் மீனாட்சியம்மை. இஃது திருப்ப
திகவைப்பில் இருக்கின்றதலம்.

அகூ. வ-து கும்பகோணத்துக்கு வடமேற்கு
உ௱. கடிகை சுவாமிமலை சுப்பிரமணியஸ்தலம் தீர்
த்தம் காவேரி.

கூஉ. வ-து திருநாகேச்சுரத்துக்கு வடகிழக்

ரு உ. கடிகை திருபுவனம் சுவாமி கம்பேசுரர் அம்மன் அறம்வளர்த்தம்பாள் இரணியாசுரனைச் சங்காரஞ்செய்து மதர்த்தவிஷ்ணு அவதாரமாகிய நரசிம்மத்தைச் சிவபெருமான் சரபப்பக்ஷி ரூபமாகி அம்மதந்தையடக்கிய தலம். சரபவிஸ்வரமூர்த்தமிருக்கின்றது. தீர்த்தம் காவேரி.

கக௩. வ-து திருத்தெளிச்சேரிக்குத் தெற்கு ௧. கடிகையில் காரைக்கால் சுவாமி சோமநாதேசுவரர் அம்மன் சோமநாயகி தீர்த்தம் சந்திரபுஷ்கரணி காரைக்காலம்மையார் திருவவதாரஞ்செய்ததலம். அன்றியும் அத்திருநகரத்தில் கயிலாசநாதர் அண்ணாமலையீசுரர் ஆலயங்களுமிருக்கின்றன.

ககச. வ-து திருத்தருமபுரத்துக்கு வடமேற்கு முக்காற்கடிகையில் திருத்தக்களூர் சுவாமி திருலோகநாதர் அம்மன் தர்மசமந்தனி இந்து திருப்பதிகவைப்பில் இருக்கின்றதலம்.

ககரு. வ-து. திருக்கோட்டாற்றுக்குக் கிழக்கு உ. கடிகையில் கெடுங்காடு எ-து நிர்க்காரணியம் சுவாமி தான்றோன்றியீசுரர் அம்மன் கெடுந்தவனநிர்த்தாள் அன்பிலும்பிரியாள் சுயம்புக்ஷேத்திரம் தீர்த்தம் கெடுந்தவனந்தீர்த்த ஏரி அகஸ்தியமகாமுனிவர் வில்வலன் வாதாவியை வதைத்ததோஷம் நீங்கும்பொருட்டுப் பூசித்ததலம். அன்றியும் அம்முனிவர் அப்பதியில் அஷ்டலிங்கப்பிரதிட்டையுஞ் செய்து பூசித்திருக்கின்றார். இதற்குக் கிழ்ப்பாரிசத்தில் வாதாவி அறுப்பென்றொரு கிராமமுமிருக்கின்றது.

க௵. வ-து. திருவாரூரறநெறிக்குத் தெற்கு ௧. கடிகையில் திருவேமப்பேறூரென்னுந் திரு

செய்ப்பேறென்னுந் தலத்திலிருந்து நமிநந்தியடிகள் செய்விளக்கிட்டு மோக்ஷமடைந்த தலம். இஃது திருப்பதிகவைப்பி லிருக்கின்றது. இப்போது திருமப்பத்தென்று வழங்குகின்றது.

கஅசு. வ-து. திருக்குவளைக்குத் தெற்கு க. கடிகையில் எட்டிகுடிவேலாயுதமூர்த்தியாகிய ஆறுமுகப்பெருமா ளெழுந்தருளியிருக்கின்ற தலம்.

ககூஎ. வ-து. திருக்கொடுங்குன்றத்துக்கு வடகிழக்கு கூ. கடிகையில் கண்ணைப்பதி எ-து பறியாமருந்தபட்டி சுவாமி பறியாமருந்தீசுவரர் அம்மன் பரஞ்சோதிபார்வதி இஃது சுயம்புஸ்தலம் சர்வானந்த தீர்த்தம் மருதவிருக்ஷம் இத்தலத்தில் கூன்பாண்டியனுக்குள்ள பிணியை மருந்து பறித்தூட்டாதகற்றினரென்பர். இதன் கிழக்கு ௰. கடிகையில்.

திருஇளையாத்தக்குடி எ-து கோவிலிளையாத்தக்குடி சுவாமி கயிலாசநாதர் அம்மன் நித்தியகலியாணிஸ்தலம்.

உகரு. வ-து. திருவாத்துறைக்குச் சமீபத்தில் மாறன்பாடி சுவாமி தாகநிவார்த்தன ஈசுரர் அம்மன் அன்னபூரணியம்மை தேன்துளிதீர்த்தம்.

உசரு. வ-து. திருப்பனங்காட்டூர் என்னும் வன்பார்த்தான் பனங்காட்டூர் தலத்துக்கு வடபால் கிருபாநாயகரென்றுங் கிருபாநாயகியென்றும் பேருடைய ஒரு தலமிருக்கின்றது.

உகூஉ. வ-து. திருக்கச் சூராலக்கோயிலுக்கு மேற்கு ௭. கடிகையில் மலையடிவாரம் சுவாமி மாந்திஸ்வரர் அம்மன் இருணீக்கியநாயகி கூர்மதீர்த்

தமுமுடைய ஒருதலம் இருக்கின்றது.

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதிதுணை.

திருஞானசம்பந்தசுவாமிகள்.

தேவாரம்.

தோடுடையசெவியன்விடையேறியோர்தூவெண்மதிசூடிக்
காடுடையசுடலைப்பொடிபூசியென்னுள்ளங்கவர்கள்வ
னேடுடையமலரான்முனைநாட்பணிந்தேத்தவருள்செய்த
பீடுடையபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே.

அருநெறியமறைவல்லமுனியகன்பொய்கையலர்மேய
பெருநெறியபிரமாபுரமேவியபெம்மானிவன்றன்னை
யொருநெறியமனம்வைத் துணர்ஞான சம்பந்தனுரைசெ
ய்த, திருநெறியதமிழ்வல்லவர் தொல்வினை தீர்தலெளிதா
மே.

கூ

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு சுவாமிகள்.

கூற்றாயினவாறுவிலக்ககிலீர்
கொடுமைபலசெய்தநானறியே
னேற்றாயடிக்கே யிரவும்பகலும்
பிரியாதுவணங்குவனெப்பொழுதுந்
தோற்றாதென்வயிற்றி னகம்படியே
குடரோடுதொடக்கிமுடக்கியிட
வாற்றேனடியே னதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே.

போர்த்தாயங்கோரானையினீருரிதோல்
புறங்காடரங்கா நடமாடவல்லா
யார்த்தானரக்கன் றனைமால்வரைக்கி
ழடர்த்திட்டருள்செய்தவதுகருதாய்
வேர்த்தும்புரண்டும் விழுந்துமெழுந்தா
லென்வேதனையான விலக்கியிடா
யார்த்தார்புனல்சூழ் கெடிலக்கரை
வீரட்டானத்துறையம்மானே.

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

திருச்சிற்றம்பலம்.

பித்தாபிறைசூடி பெருமானேயருளாளா
வெத்தான்மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணை நல்லூரருட்டு (றையு
ளத்தாவுனக்காளாயினியல்லேனெனலாமே.

காரூர்புனலெய்திக் கரைக்கலவித்திரைக்கையாற்
பாரூர்புகளெய்தித்திகழ் பன்மாமணியுந்திச்
சீரூர்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளாரூரனெம்பெருமாற்கா ளல்லேனெனலாமே.

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

திருத்தொண்டத்தொகை.

தில்லைவாழந்தணர்தமடியார்க்குமடியேன்
றிருநீலகண்டத்துக்குயவனார்க்கடியே
னில்லையேயென்னாத வியற்பகைக்குமடியே
னிளையான்றன்குடிமாறனடியார்க்குமடியேன்
வெல்லுமாமிகவல்லமெய்ப்பொருளுக்கடியேன்

விரிபொழில்சூழ்குன்றையார் விறன்மிண்டர்க்க
னல்லிமென்முல்லையந்தா ரமர்நீதிக்கடியே (டியே
னாரூர னாரூரி லம்மானுக்காளே. (௧)

இலைமலிந்தவேனம்பி யெறிபத்தற்கடியே
னேனாதிநாதன்ற னடியார்க்குமடியேன்
கலைமலிந்தசீர்நம்பி கண்ணப்பற்கடியேன்
கடவூரிற்கலயன்ற னடியார்க்குமடியேன்
மலைமலிந்ததோள்வள்ளன் மானக்கஞ்சாற
னெஞ்சாதவாட்டாய னடியார்க்குமடியே
னலைமலிந்தபுனன்மங்கை யானாயற்கடியே
னாரூர னாரூரி லம்மானுக்காளே. (௨)

மும்மையாலுலகாண்டமூர்த்திக்குமடியேன்
முருகனுக்குமுருத்திர பசுபதிக்குமடியேன்
செம்மையேதிருநாளைப் போவார்க்குமடியே
திருக்குறிப்புத் தொண்டர்தம் மடியார்க்குமடி
மெய்ம்மையேதிருமேனி வழிபடாநிற்க (யேன்
வெகுண்டெழுந்ததாதையை மழுவினாலெறிந்த
வம்மையானடிச்சண்டிப் பெருமானுக்கடியே
னாரூர னாரூரி லம்மானுக்காளே. (௩)

திருநின்றசெம்மையே செம்மையாக்கொண்ட
திருநாவுக்கரையன்ற னடியார்க்குமடியேன்
பெருநம்பிகுலச்சிறைத னடியார்க்குமடியேன்
பெருமிழலைக்குறும்பற்கும் பேயார்க்குமடியே
னொருநம்பியப்பூதி யடியார்க்குமடியே
னொலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கற்கடியே
னருநம்பி நமிநந்தி யடியார்க்குமடியே
னாரூர னாரூரி லம்மானுக்காளே. (௪)

வம்பறாவரிவண்டு மணநாறமலரு
மதுமலர்நற்கொன்றையா னடியலாற்பேணா

வெம்பிரான்சம்பந்த னடியார்க்குமடியே
னேயர்கோன்கலிக்காம னடியார்க்குமடியேன்
னம்பிரான்றிருமூல னடியார்க்குமடியே
னாட்டமிகுதண்டிக்கு மூர்க்கற்குமடியே
னம்பரான்சோமாசி மாறனுக்குமடியே
னாரூரனாரூரி லம்மானுக்காளே. (ரு)

வார்கொண்டவனமுலையா ளுமைபங்கன்கழலே
மறவாதுகல்லெறிந்த சாக்கியற்குமடியேன்
சீர்கொண்டபுகழ்வள்ளல்சிறப்புலிக்குமடியேன்(ன்
செங்காட்டங்குடிமேய சிறுத்தொண்டற்கடியே
கார்கொண்டகொடைக்கழிற் றறிவார்க்குமடியே
கடற்காழிக்கணநாத னடியார்க்குமடியே (ன்
னார்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோனடியே
னாரூ னாரூரி லம்மானுக்காளே. (சா)

பொய்யடிமையில்லாத புலவர்க்குமடியேன்
பொழிற்கருவூர்த்துஞ்சிய புகழ்ச்சோழற்கடியே
மெய்யடியானரசிங்க முனையரையற்கடியேன் (ன்
விரிதிரைசூழ்கடனாகை யதிபத்தர்க்கடியேன்
கைதடிந்தவரிசிலையான் கலிக்கம்பன்கலியன்
கழற்சத்திவரிஞ்சையர்கோ னடியார்க்குமடியே
னையடிகள்காடவர்கோ னடியார்க்குமடியே
னாரூர னாரூரி லம்மானுக்காளே (எ)

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண்டிருந்த
கணம்புல்லநம்பிக்குங் காரிக்குமடியே
னிறைக்கொண்டசிந்தையா னெல்வேலிவென்ற
நின்றசீர்நெடுமாற னடியார்க்குமடியேன்
றுறைக்கொண்டசெம்பவளமிருளகற்றுஞ்சோதித்
தொன்மயிலைவாயிலா னடியார்க்குமடியே
னறைக்கொண்டவேனம்பி முனையடுவார்க்கடியே
னாரூர னாரூரி லம்மானுக்காளே, (அ)

கடல்சூழ்ந்தவுலகெலாங் காக்கின்றபெருமான்
காடவர்கோன் கழற்சிங்க னடியார்க்குமடியேன்
மடல்சூழ்ந்ததார்நம்பி யிடங்கழிக்குந் தஞ்சை
மன்னவனாஞ்செருத்துணைதன் னடியார்க்குமடி
புடைசூழ்ந்தபுலியதண்மே லரவாடவாடி (யேன்
பொன்னடிக்கேமனம்வைத்தபுகழ்த்துணைக்கும
டியே, னடல்சூழ்ந்தவேனம்பிகோட்புலிக்குமடியே
னாரூர னாரூரி லம்மானுக்காளே. (௯)

பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்குமடியேன்
பரமனையே பாடுவா ரடியார்க்குமடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்
றிருவாரூர்ப் பிறந்தார்க ளெல்லார்க்குமடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க்கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்குமடியே
னப்பாலு மடிச்சார்ந்த வடியார்க்குமடியே
னாரூர னாரூரி லம்மானுக்காளே. (௧௦)

மன்னியசீர் மறைநாவ னின்றவூர்ப் பூசல்
வரிவளையாண் மானிக்கு நேசனுக்குமடியேன்
தென்னவனா யுலகாண்ட செங்கணார்க்கடியேன்
றிருநீலகண்டத்துப் பாணனார்க்கடியே
னென்னவனா மரனடியே யடைந்திட்ட சடைய
னிசைஞானி காதலன் றிருநாவலூர்க்கோ
னன்னவனா மாரூர னடிமைகேட் டுவப்பா
ராரூரி லம்மானுக் கன்பரா வாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

மாணிக்கவாசக சுவாமிகள்

திருவாசகம்.

திருச்சிற்றம்பலம்.

உடையாளுன்றனடுவிருக்குமுடையாணடுவுணீயிருத்தி
யடியேனடுவுளிருவீருமிருப்பதானாலடியேனுன் (ம்
னடியார்நடுவுளிருக்குமருளைப்புரியாய்பொன்னம்பலத்தெ
ம்முடியாமுதலேயென்கருத்து முடியும்வண்ணம்முன்னின்
றே.

சோதியேசுடரே சூழொளிவிளக்கே
சுரிகுழற்பணைமுலைமடந்தை
பாதியேபரனே பால்கொள்வெண்ணீற்றுப்
பங்கயத்தயனுமாலறியா
நீதியேசெல்வத் திருப்பெருந்துறையி
னிறைமலர்க்குருந்தமேவியசீ
ராதியேஅடியே னாதரித்தழைத்தா
லதெந்துவேயென்றருளாயே.

திருச்சிற்றம்பலம்.

திருமாளிகைத்தேவர் திருவிசைப்பா.

திருச்சிற்றம்பலம்.

ஒளிவளர்விளக்கே யுலப்பிலாவொன்றே
யுணர்வுசூழ்கடந்ததோருணர்வே
தெளிவளர்பளிங்கின் றிரண்மணிக்குன்றே
சித்தத்துட்டித்திக்குந்தேனே
யளிவளருள்ளத் தானந்தக்கனியே
யம்பலமாடரங்காக

வெளிவளர்தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன்விளம்புமாவிளம்பே.

திருச்சிற்றம்பலம்.

சேந்தனார் திருவிசைப்பா.

திருச்சிற்றம்பலம்.

ஏகநாயகனை யிமையவர்க்கரசை
யென்னுயிர்க் கமுதினையெதிரில்
போகநாயகனைப் புயல்வணற்கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையாவூர்ந்த
மேகநாயகனை மிகுதிருவீழி
மிழலைவிண் ணிழிசெழுங்கோயில்
யோகநாயகனை யன்றிமற்றொன்று
முண்டெனவுணர்கிலேன் யானே.

கற்றவர் விழுங்குங்கற்பகக்கனியைக்
கறையிலாக் கருணைமாகடலை
மற்றவரறியாமாணிக்கமலையை
மதிப்பவர்மனமணிவிளக்கைச்
செற்றவர் புறங்கள்செற்றவெஞ்சிவனைத்
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன்றன்னைக்கண்டுகண்டுள்ளங்
குளிரவென்கண்குளிர்ந்தனவே.

திருச்சிற்றம்பலம்.

சேந்தனார் திருப்பல்லாண்டு.

சொல்லாண்டசுருதிப்பொருள்சோதித்ததூய்மனத் தொண்டருள்ளீர், சில்லாண்டிற்சிதையுஞ்சிலதேவர் சிறுநெறி சேராமே, வில்லாண்டகனகத்திரண் மேருவிடங்கன்விடைப்பாகன், பல்லாண்டென்னும் பதங்கடந்தானுக்கே
[பல்லாண்டு கூறுதுமே

பாலுக்குப் பாலகன்வேண்டியழுதிடப் பாற்கடலீந்த பிரான்மாலுக்குச்சக்கர மன்றருள்செய்தவன்மன்னிய தில்லைதன்னுளாலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே யிடமாகப் பாலித்துநட்டம்பயிலவல்லானுக்கேபல்லாண்டு கூறுதுமே.

குழலொலியாழொலி கூத்தொலியேத்தொலி யெங்குங்குழாம்பெருகி, விழவொலிவிண்ணளவுஞ்சென்றுவிம்மி மிகுதிருவாரூரின், மழவிடையாற்குவழிவழியாளாய்மணஞ்செய்குடிப்பிறந்த, பழவடியாரொடுங்கூடியெம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

பெரியபுராணம்.

திருச்சிற்றம்பலம்.

உலகெலாமுணர்ந்தோதற்கரியவ
னிலவுலாவியநீர்மலிவேணிய
னலகில்சோதியனம்பலத்தாடுவான்
மலர்சிலம்படிவாழ்த்திவணங்குவாம்.

கற்பனைகடந்தசோதிகருணையேயுருவமாகி யற்புதக்கோலநீடியருமறைச்சிரத்தின்மேலாஞ் சிற்பரவியோமமாகுந்திருச் சிற்றம்பலத்துணின்று பொற்புடனடஞ்செய்கின்ற பூங்கழல்போற்றிபோற்றி.

தனிவெள்விடை மேனெடுவிசும்பிற் றலைவர்பூதகணநாதர், முனிவரமரர்விஞ்சையர்கண் முதலாயுள்ளோர்போற்றிசைப்ப, வினியகறியுந்திருவமுதுமமைத்தார்காண வெழுந்தருளிப், பனிவெண்டிங்கண்முடிதுளங்கப் பரந்தகருணை நோக்களித்தார்.

முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதிதுணை.

சைவசமயம்,

சைவசமயி,

அநாசாரம்,

திருக்கோயிற் குற்றங்கள்.

இவை

யாழ்ப்பாணம்

நல்லூர்

ஆறுமுகநாவலர்

அவர்களால்

எழுதப்பட்டன.

உ

கணபதி துணை.

சைவசமயம்.

பிறப்பும் இறப்பும் உடையவர்கள் பசுக்கள்; பசுக்கள் எண்ணில்லாதவர்கள்; பசுக்களாவார், தேவர்கள் முதலாகக் கிருமிகள் ஈறாக உள்ளசீவர்கள்.

பிறப்பும் இறப்பும் இல்லாதவர் பதி; பதி ஒருவரே; அந்தப் பதி சிவபெருமான். சிவபெருமானுக்குப் பசுக்களெல்லாம என்றும் அடிமைகள்; சிவபெருமான் அந்தப் பசுக்கள்தோறும் நிறைந்து நின்று அவர்களை எல்லாம் ஆளுந்தலைவர். ஆதலாற் சிவபெருமான் ஒருவரே பசுபதி. [பசுக்களுக்குப் பதி. பசுபதி-பசு-ஆன்மா. பதி-தலைவன்.]

இந்த உண்மையை விசுவசித்துச் சிவபெருமானை வழிபடுகிறமார்க்கந் சைவ சமயம். பலரைப் பரம் என்று கொண்டு வணங்குகிற சமயம் சைவ சமயம் ஆகாது, சிவபெருமானிலும் உயர்ந்தவர் உண்டு என்றுவது, சிவபெருமானுக்குச் சமத்துவம் உடையவர் உண்டு என்றுவது, கொள்வது சிவத்துரோகம்.

சிவபெருமானின் வேறாகாத திருவருளே சிவசத்தி; அந்தச் சிவசத்தியே பார்வதிதேவியாரென்று சொல்லப்படும். சிவபெருமான் ஆன்மாக்களு

க்கு அருள்செய்யும்பொருட்டுக் கொண்டருளிய மூர்த்தங்கள்:—

விநாயகக்கடவுள், சுப்பிரமணியக்கடவுள், வைரவக்கடவுள், வீரபத்திரக்கடவுள். இவர்களுக்குச் செய்யும் வணக்கம், சிவபெருமான் ஒருவரைக் குறித்த வணக்கமேயாம். சத்தி-வல்லமை.

முப்பத்துமுக்கோடி தேவர்களைப் பரம் என்று கொண்டு வணங்குகிற மார்க்கஞ் சைவசமயம் என்று மூடர்கள் பலர் சொல்லுகிறார்கள். மனிதர்களைப்போலவே பிறந்தும் இறந்தும் உழலுகிற தேவர்களைப் பரம் என்று கொள்வது சைவசமயத்துக்கு முற்றும் விரோதம்.

சைவசமயிகளை அஞ்ஞானிகள்(Heathens)என்று கிறிஸ்தவர்கள் வழங்குகிறார்கள். அஞ்ஞானி என்கிற சொல்லுக்குப் பொருள் மெய்க்கடவுளை அறியும் அறிவு இல்லாதவன். கிறிஸ்தவர்கள் தங்கள் கருத்தின்படி தாங்கள் சைவசமயிகளை அஞ்ஞானிகள் என்று வழங்கலாம் என்றால், சைவசமயிகளுந் தங்கள் கருத்தின்படி தாங்கள் கிறிஸ்தவர்களை அஞ்ஞானிகளென்று வழங்கலாமே!

சைவசமயிகள் என்று பேர் இட்டுக்கொண்டு, அநேக மூடர்கள், உயிர்ப்பலி ஏற்கிற துட்ட தேவதைகளையும், காடன், மாடன், சுடலைமாடன், காட்டேரி, மதுரைவீரன், கறுப்பன், பதினெட்டாம்படிக்கறுப்பன், சங்கிலிக்கறுப்பன், பெரியதம்பிரான், முனி, கண்ணகி, பேய்ச்சிமுதலானவர்களையும், வணங்குகிறார்கள். இந்தியாவில் அநேக மூடர்கள் மகமதியர்களுடைய பள்ளிவாசலைச் சேவிக்கிறார்கள். இலங்கையில் அநேக மூடர்கள் ரோமான்கத்தோலிக்கருடைய மரியைகோயிலுக்குக் காணிக்கை செலுத்துகிறார்கள். இவர்கள் எ

ல்லாருஞ் சிவத்துரோகிகள்; இவர்களே அஞ்ஞானிகள்.

சைவசமயத்தைத் தமிழ்ச்சமயம் என்றும், சைவசமயக்கோயிலைத் தமிழ்க்கோயில் என்றும், அறிவில்லாத சனங்கள் வழங்குகிறார்கள். தமிழ் என்பது ஒரு சமயத்தின் பெயரன்று, ஒரு பாஷையின் பெயர்.

பெறுதற்கு அரிய மனிதப் பிறவியைப் பெற்றும், மிக மேலாகிய சைவசமய மரபிலே பிறந்தும், சைவசமயம் இப்படிப்பட்டது, அந்தச் சமயக்கடவுள் இப்படிப்பட்டவர், அவரை வழிபடுகிற முறைமை இப்படிப்பட்டது என்று ஆராய்ந்து அறிந்துகொண்டு சைவசமயத்தை அநுட்டியாது, நேர்ந்தபடி நடப்பது, ஐயையோ! நரகத்துன்பத்துக்குக்காரணம்.

சைவசமயிகள் சைவசமயத்தை அறியாது கெடுவதற்குக் காரணம், சைவசமயத்தைச் சைவசமயகுருமார்கள் பிரசங்கஞ் செய்யாது விடுதலே. யாதாயினும் ஒரு சமயத்தை அறிந்து பிரசங்கஞ் செய்யாதவர்கள், அந்தச்சமயத்துக்குத் தாங்கள் குருமார்கள் என்றுசொல்லிக்கொண்டு திரிவதும், அந்தக் குருத்துவத்துக்கு உரிய பொருளையும் மரியாதையையும் தாங்கள் பெற விரும்புவதும் என்னை! வெட்கம்! வெட்கம்!!

சைவசமயி.

விபூதி தரிப்பது மாத்திரமே சைவசமயிக்கு இலக்கணம் என்று அநேகர் எண்ணுகிறார்கள்.

விபூதி தரிப்பது, மற்சமாமிசம் புசியாது விடுவது இந்த இரண்டு மாத்திரமே சைவசமயிக்கு இலக்கணம் என்று வேறு அநேகர் எண்ணுகிறார்கள்.

விபூதி தரிப்பது, மற்ச மாமிசம் புசியாது விடுவது, மற்ச மாமிசம் புசிக்கிறவர் காணுமற் போசனஞ்செய்வது இந்த மூன்று மாத்திரமே சைவசமயிக்கு இலக்கணம் என்று வேறு அநேகர் எண்ணுகிருர்கள்.

சைவசமயிக்கு உரிய முக்கியலக்கணங்களாவன:--

க. கொலை, களவு, கள்ளுண்ணல், மற்சமாமிசம் புசித்தல், வியபிசாரம், பொய் முதலாகிய பாவங்களை மரண பரியந்தம விலக்கிநடப்பது.

உ. உயிர்களுக்கு இரங்குதல், மெய்பேசுதல், வறியவர்களுக்கு ஒருபிடி அன்னமாவது கொடுத்தல், செய்நன்றி அறிதல் இந்தத் தருமங்களை மரணபரியந்தம் பாதுகாத்து நடப்பது.

ங. பிதா, மாதா, பாட்டன், பாட்டி, தமையன், மாமன், உபாத்தியாயர், குரு, இராசா முதலிய பெரியோர்களை மரணபரியந்தம் உபசரிப்பது.

ச. சிவதீக்ஷை பெற்றுக்கொள்வது.

ரு. விபூதி ருத்திராக்ஷந் தரிப்பது.

சா. சந்தியாவந்தனம், சிவத்தியானம், பஞ்சாக்ஷர செபம், சிவஸ்தோத்திரம், இவைகளை மரணபரியந்தம், நித்தமும், ஒருபத்து நிமிஷநேரத்திலாவது, மனத்தை ஒருக்கி, விதிப்படி அன்புடன்செய்து முடிப்பது.

எ. நித்தமுமாவது, புண்ணிய காலங்களிலாவது சிவலிங்கப்பெருமானை அன்புடன் விதிப்படி வலஞ்செய்து வணங்கித் துதிப்பது.

அ. சைவ வினுவிடை, சிதம்பரமான்மிய வசனம், பெரியபுராண வசனம் முதலாகிய புத்தகங்களை வாசித்தாவது கேட்டாவது அறிவது.

௯. சிவபெருமானுடைய மகிமையையும் புண்ணிய பாவங்களையும் சிவ பெருமானை வழிபடு முறைமையையும் அறிவிக்கிற சைவப்பிரசங்கங்களைக் கேட்டுச் சிந்திப்பது.

௧0. சிவநிந்தை, சிவசாத்திர நிந்தை, குருநிந்தை, சிவனடியார் நிந்தை இவைகளைக் கேளாது நீங்கிவிடுவது.

௧௧. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் என்னுஞ் சைவசமய குரவர் நால்வருடைய திருநக்ஷத்திரங்களிலே, அவரவருடைய சரித்திரத்தைக் கேட்டுச் சிவனடியார் ஒருவருக்காவது அன்னங் கொடுத்து, விரதத்துடன் இருப்பது.

௧௨. செய்யத்தகாத பாவத்தைச் செய்தாலும், செய்யத்தக்க புண்ணியத்தைச் செய்யாதுவிட்டாலும், மனம் பதைபதைத்து அஞ்சி நடுநடுங்கி, குருவை அடுத்து, அவர் சிவாகமப் பிரகாரம்விதித்த பிராயச்சித்தத்தை விசுவாசத்துடன் செய்துகொள்வது.

அநாசாரம்.

௧. மற்சம் மாமிசம் புசித்தல்.

௨. கள்ளுச் சாராயங் குடித்தல்.

௩. மற்சம் மாமிசம் புசிப்பவர், கள்ளுச் சாராயங்குடிப்பவர், தாழ்ந்த சாதியார், அன்னிய சமயிகள் என்கிற இவர்களிடத்தாவது, இவர்களுடன் இருந்தாவது, இவர்கள் காணவாவது போசனம் பண்ணுதல்

௪. சனனசௌசம் மரணசௌசம் உடையவரிடத்தே போசனம் பண்ணுதல்.

௫. போசனஞ் செய்த உடனே எச்சில் தெளியாது விடுதல்.

௬. எந்தப் பாத்திரத்தையாவது எச்சிலாக்குதல்.

௭. பலகாரம் பழம் முதலியவைகளை எச்சில் பண்ணிப் புசித்தல்

௮. புகையிலைச் சுருட்டுப் பிடித்தல்.

௯. வெற்றிலை பாக்கு வாயில் இருக்கச் சயனித்தல்.

௧0. காலையிலே தந்தசுத்தி பண்ணுமுன்னே வெற்றிலை பாக்குப் போடுதல்

௧௧. வாயோடு கையையுங் கையோடு பாத்திரத்தையும் அணைத்து, எச்சில் பண்ணித் தண்ணீர் குடித்தல்.

௧௨. வீட்டு முற்றத்திலும், கிணற்றங்கரையிலும், குளக்கரையிலும், ஆற்றங்கரையிலும், பூந்தோட்டத்திலும், திருவீதியிலும், எச்சில் உமிழ்தல், மலசலங் கழித்தல்.

௧௩. ஸ்நானத்துக்குஞ் சமையலுக்கும் உபயோகப்படுகிற சலத்திலே சௌசம் பண்ணுதல்.

௧௪. கிணற்றங்கரையிலே சௌசம் பண்ணுதல்.

௧௫. சௌசத்தின் பொருட்டுப் பாத்திரத்திலே சலம் மொண்டு வைத்துக்கொள்ளாது மலசலங்கழித்தல்.

௧௬. சௌசஞ்செய்த உடனும், தந்தசுத்திசெய்த உடனும், போசனஞ் செய்த உடனும், வாய்கொப்பளித்துக் கால் கழுவாது விடுதல்.

௧௭. க்ஷௌரம் பண்ணுவித்துக்கொண்டாலும், துக்கவீட்டுக்குப்போனாலும், உடுத்த வஸ்திரத்துடனே முழுகாது விடுதல்.

௧௮. முகமாத்திரம் க்ஷௌரம் பண்ணுவித்துக்கொள்ளுதல்.

௧௯. மத்தியானத்துக்குப்பின் க்ஷௌரம் பண்ணுவித்தல்

௨0. தைச் சங்கிராந்தியிலும், ஆசௌச முடிவிலும், பழைய மட்பாண்டங்களைத் தள்ளாது விடுதல்,

௨௧. மட்பாண்டங்களை எல்லாருங் காணும்படி வெளியிலே வைத்தல்,

௨௨. பாண்டங்களை நாய் காகம் முதலியவைகள் தீண்ட விடுதல்.

௨௩. ஓரத்திலே தப்பாத வழியிலே துப்புதல்.

௨௪. கஞ்சா அபின் உண்டல.

இந்த அநாசாரங்களை எல்லாரும் விலக்கித் திருத்தம் உற நடக்கக்கடவர்கள்.

திருக்கோயிலிலுந் திருவீதியிலுஞ்செய்யத்தகாத குற்றங்கள்.

௧. ஸ்நானஞ்செய்யாது போதல்.

௨. தோய்த்துலராதவேட்டி தரித்துக்கொண்டுபோதல்.

௩. கால் கழுவாது போதல்.

௪. [illegible]சௌசத்துடனே போதல்.

௫. தலையில் வஸ்திரந் தரித்துக்கொள்ளுதல்.

௬. சட்டையிட்டுக்கொள்ளுதல்.

௭. போர்த்துக்கொள்ளுதல்.

௮. மேல்வேட்டி போட்டுக்கொள்ளுதல்.

௯. பாதரக்ஷை இட்டுக்கொள்ளுதல்.

௧௦. வாகனமேறிக்கொள்ளுதல்.

௧௧. குடை பிடித்துக்கொள்ளுதல்.

௧௨. வெற்றிலை பாக்கு உண்டல்.

௧௩. துப்புதல்.

௧௪. மலசலங் கழித்தல்.

௧௫. மூக்குநீர் சிந்துதல்.

௧௬. மயிர் கோதி முடித்தல்.

௧௭. சூதாடுதல்.

௧௮. சிரித்தல்.

௧௯. சண்டையிடுதல்.

௨௦. வீ[illegible]ர்த்தை பேசுதல்.

உக. காமப்பற்று வைத்தல்,
உஉ. காலை நீட்டிக்கொண்டிருத்தல்.
உ௩. சயனித்தல்.
உச. ஆசனத்திருத்தல்.
உரு. சுவாமிக்கும் பலிபீடத்துக்குங் குறுக்கே போதல்.
உசா. சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் இடையிலே நமஸ்காரம் பண்ணுதல.
உஎ, சுவாமிக்குக் காலைநீட்டி நமஸ்காரம் பண்ணுதல்.
உஅ. சுவாமிக்குக் காலைநீட்டி அங்கப்பிரதக்ஷிணம் பண்ணுதல்.
உகூ. திருமாலியத்தைக் கடத்தல்.
௩0. திருமாலியத்தை மிதித்தல்.
௩க. தூபி, துசத்தம்பம், பலிபீடம், விக்கிரகம் என்னும் இவைகளின் நிழலில் மிதித்தல்.
௩உ. விக்கிரகத்தைத் தொடுதல்.

இந்தக் குற்றங்களைச் செய்தவர்கள் நரகத்திலே தண்டிக்கப்படுவார்கள் என்று ஆகமங்களும் [illegible]ங்களுஞ் சொல்கின்றன. குளிக்கப் போய்ச் சேறு பூசிக் கொள்வது போலச் சுவாமி தரிசனமாகிய புண்ணியஞ் செய்யப்போய்ப் பாவத்தைத் தேடிக்கொள்வது புத்தியன்று. எல்லாரும், இந்தக்குற்றங்களை விட்டு விதிப்படி சுவாமி தரிசனஞ்செய்து, திருவருளைப்பெற்று உய்யக்கடவர்கள்.

இந்தியாவிலே, உத்தியோகத்தர்கள் அநேகர், சுவாமி சந்நிதானத்திலே, விதிக்கு விரோதமாகச், சட்டை இட்டுக்கொண்டும், போர்த்துக்கொண்டும், மேல்வேட்டி போட்டுக்கொண்டும், தலையில் வஸ்திரந் தரித்துக்கொண்டும், பாதரக்ஷை இட்டுக்கொண்டும், குடை பிடித்துக்கொண்டும் போகிறார்கள். அவர்கள், தங்கள் சமயத்தில் விசுவாசம் உடையவர்களானால், இப்படிச்செய்வார்களா! கிறிஸ்தவர்களுள்ளே கவர்னர் முதலிய பெரிய உத்தியோகத்தர்களுந் தங்கள் [illegible]க்குத்